நன்றி - நூலகத்திட்டம்


# புதிய பூமி

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

PUTHIYAPOOMI පුදිය පුමි

சுற்று 04 டிசெம்பர் 1997 சுழற்சி 17 பக்கம் 12 விலை ரூபா 10/=




புதியபூமி 1998 தை மாதம் முதல்

- அதிக பக்கங்களுடன்
- வடக்கு கிழக்கு மலையகச் செய்திகள்
- வெகுஜன அரசியல் கட்டுரைகள்
- சர்வதேச அரசியல் நோக்குகள்
- மக்கள் சார்புநிலை விமர்சனங்கள்
- புகலிடச் செய்திகள்

மற்றும் பிற ஆக்கங்களுடன் வெளிவருகிறது


# தோ. தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு ரூபா 150/= வேண்டும்!





*தனியார் கம்பெனிகள் பொறுப்பேற்றபிறகு சம்பள உயர்வு, வேலைவாய்ப்பு என்பவை மறுக்கப்பட்டு, தோட்டத் தொழிலாளர்கள் மீது கடுமையான வேலை நிபந்தனைகள் சுமத்தப்பட்டு வருகின்றன. அதேவேளை நீண்டகால தொழிலாளர்கள் போராட்டத்தால் பெற்ற வாழ்க்கைச் செலவுப்படி, வேலை நேரம் போன்ற உரிமைகளையும் தனியார் கம்பெனிகள் பறித்துவிட்டன.*

*இந்த அடக்குமுறைகளாலும் உரிமை மறுப்புகளாலும் தோட்டத் தொழிலாளர்கள் பாரிய கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். மறுபுறுத்தில் தோட்டக் கம்பெனிகள் கொள்ளை லாபத்தை ஈட்டி வருகின்றன என்பது அறிக்கைகளின் வாயிலாக தெரியவருகின்றது.*

ஆனால் ஏற்கனவே வழங்கப்பட வேண்டிய சம்பள உயர்வுகளை வழங்குவதாகவும் இல்லை. இந்த வரவு செலவு திட்டத்திலும் தோட்டத் தொழிலாளர்களுக்கு உரிய சம்பள உயர்வு சிபாரிசு செய்யப்படவும் இல்லை. அவர்கள் கம்பனிகளிடம் கையளிக்கப்பட்ட தொழிலாளர்களாகவே கணிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் தான் இந்த வரவு செலவுத்திட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து மலையக மக்கள் முன்னணியின் அங்கத்தினர்களை வீதிக்கு இறக்கி மறியல் போராட்டம் செய்கிறார் ம.ம.மு. தலைவர் சந்திரசேகரம். 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நாளாந்த சம்பளத்தில் எட்டு ரூபா சம்பள உயர்வு கோரி நடத்தப்பட்ட வேலைநிறுத்தத்திலிருந்து விலகிக் கொண்டு அப்போராட்டத்தை ம.ம.மு. தலைமை காட்டிக் கொடுத்ததை மலையக மக்கள் அவ்வளவு விரைவாக மறந்து விடமாட்டார்கள்.


ஒரு வாரத்திற்கு மேல் வேலை நிறுத்தம் செய்த பின்பு நடைபெற்ற பேச்சுவார்த்தையில் குத்துக் கரணம் அடித்தது. இ.தொ.கா. தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கி வந்த ஒரு புள்ளிக்கு 4 சதம் வாழ்க்கைச் செலவு படியை இரத்து செய்ய இணக்கம் தெரிவித்தது. இ.தொ.கா. தலைமை, எட்டு ரூபா சம்பள உயர்வுக்குப் பதிலாக ரூபா 2.48 சதம் வழங்கப்படுவதை ஏற்றுக் கொண்டது. அதுமட்டுமல்ல 1997 டிசம்பர் வரை தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வே கோரப்போவதில்லை என்று வாக்குறுதி செய்து தோட்ட தனியார் கம்பெனிகளுக்கு வழங்கியிருந்தது.

அப்படியான இ.தொ.கா.வின் தலைவர் தொண்டமானும் கூட கூட்டங்கள் நடத்தி ஊர்வலம் நடத்தி சம்பளவுயர்வு பற்றி பேசுகிறார்.

தொண்டமானாலோ சந்திரசேகரத்தாலோ, வேறு இடதுசாரி தொழிற் சங்கத்தலைவர்கள் என்று அழைக்கப்படுபவர்களாலோ சம்பள உயர்வு பற்றி கதைக்காமல் அரசியல், தொழிற்சங்க பிழைப்பு நடத்த முடியாது என்பது யதார்த்தமாகி விட்டது.

பாராளுமன்றத்துக்குள் வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து பேசிக் கொண்டும் வாக்களித்துக் கொண்டும் இருக்கும் இ.தொ.கா. எம்.பீக்களும், ம.ம.மு. எம்.பியும் தோட்டத் தொழிலாளர்களும் சம்பளப் போராட்டம் நடத்தும் 'சாம்பியன்' களாக காட்டிக் கொள்ளவே தொழிலாளர்களின் முன்னிலையில் போராட்ட வீரர்கள் என்ற வேஷம் தரித்திருக்கின்றனர்.

இவர்கள் எப்போதுமே மலையக மக்களை தப்புக் கணக்குப் போடுபவர்களாகவே இருக்கிறார்கள் என்பது இவர்களின் அண்மைக் கால 'புதிய போராட்ட ஆவேசங்களும், வீராவேசங்களும்'' உணர்த்தி நிற்கின்றனர்.



கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியிலிருந்து கூட மேற்படி மலையக தொழிற்சங்கத்தவர்கள் பாடம் படித்ததாக இல்லை. ஐ.தே.கட்சி தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றி அவர்களின் வாக்குகளை பெற்றுக் கொண்டதாக தொண்டமானும், தோட்டத் தொழிலாளர்கள் பழக்க தோசத்தால் யானைக்கு வாக்களித்ததாக சந்திரசேகனும் கண்டு பிடித்துள்ளனர்.

தொடர்ச்சி பக்கம் 11இல்

## வடக்கே தேர்தல் நடத்துவதால் நடக்கப் போவது என்ன?




இலங்கை தமிழ், முஸ்லீம் மலையக மக்களின் தலைவர்கள் சிங்கள பேரினவாத அரசியல் வஞ்சக வலைகளில் மாட்டிக் கொண்டதையே வரலாறாக கொண்டிருந்தனர். அந்த வரலாற்றை பாடமாகக் கொண்டே அரசாங்கம் நடத்தவுள்ள குடாநாட்டு உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை தமிழ் அமைப்புகள் அணுக வேண்டும்.

அவ்வாறு நிதானமாக அணுகாமல் தேர்தலில் போட்டியிட முற்படும் போது வரலாற்றில் பழைய தமிழ் தலைவர்கள் விட்ட

தொடர்ச்சி பக்கம் 2இல்

## சிறைச்சாலைக் கொலைகளை உடன்நிறுத்து! துரித விசாரணை அல்லது விடுதலை!!



நாடு முழுவதிலும் சிறைச்சாலைகள் இராணுவ பொலீஸ் தடுப்பு நிலையங்களில் சுமார் ஆயிரத்து ஐந்நூறுக்கும் இரண்டாயிரத்திற்குமிடையிலான தொகையினர் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது. குடாநாட்டில் ஏற்கனவே காணாமல் போயுள்ள சுமார் எழுநூறு பேர்கள் இதனுள் உள்ளடக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் வடக்கு கிழக்கு கொழும்பு மலையகம் மற்றும் பிற பிரதேசங்களில் கைது செய்யப்பட்ட தமிழர்களாவர். இவர்களில் இளைஞர் யுவதிகள் பெண்கள் உட்பட வயது முதிர்ந்தவர்களும் உள்ளடங்குவர். இவர்கள் அனைவரும் தமிழர்கள் என்பதால் புலிகள், புலிகளுக்கு உதவியோர், பயங்கரவாதத்திற்கு ஆதரவு தந்தவர்கள் என்ற குற்றச்சாட்டுதல்களே சுமத்தப்பட்டுள்ளன. அவை கூட ஆதாரபூர்வமானவை என்பதற்கு பெரும்பாலும் இச் சந்தேக நபர்களிடமிருந்து பெறப்படும் ஒப்பதல் வாக்கு

தொடர்ச்சி பக்கம் 11இல்

நன்றி - நூலகத்திட்டம்



# தமிழ் இளைஞர்கள் ஏமாற்றம்! வவுனியா இளைஞர்களின் அனுபவம்

1997 நவம்பர் 11 ஆம் திகதி முற்பகல் 10.00 மணியிலிருந்து பி.ப. 5.00 மணி வரை தேசிய இளைஞர் நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தொழில் வியாபாரத்தை கற்கை தொடர்பான விளம்பரங்கள் பத்திரிகைகள், வானொலிகள், மூலமாகவும் செய்யப்பட்டிருந்தது. குறிப்பாக 10.11.97 அன்றைய தினம் 12.45 மணியில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன செய்தியிலும் தெரிவித்தனர். வடகிழக்கு இளைஞர்கள் தொடர்பிற்கு அந்தந்த பகுதியில் உள்ள இளைஞர் சேவைகள் மன்றத்தின் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளுமாறே தெரிவிக்கப்பட்டது. ஆனால் அங்கு தொடர்பு கொண்டு கேட்டபோது இது வானொலி மூலமாகவே பொதுவான அறிவிப்பு நமக்கு எதுவித தொடர்பும் இல்லையென அங்கு கடமையாற்றும் ஒரு இளைஞர் சேவை உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார் என சில இளைஞர்கள் வேதனையுடன் தெரிவித்துள்ளனர். (இளைஞர் கழகம், நிஸ்கோ அங்கத்துவம் என்பவற்றிற்கு முன்னுரிமை என விளம்பரத்தில் தெரியப்படுத்தப்பட்டது)

எது எப்படியிருந்த போதும் வவுனியாவில் இருந்தும் கணிசமான இளைஞர்கள் கொழும்பு சென்றனர். அங்கு சென்ற பின்பே ஏமாற்றமடைந்துள்ளதை அறிந்து ஆத்திரப்பட்டு கேள்விகளையும் எழுப்பியுள்ளனர். தமிழ் இளைஞர்களுக்கான நேர்முகப்பரீட்சைக்கான எதுவித ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கவில்லையாம். விண்ணபப் படிவங்கள் கூட சிங்கள மொழியில் இருந்ததாகவும் விண்ணப்பத்தினை தமிழில் பூர்த்தி செய்து கொடுத்த போது ஆங்கிலத்தில் தருமாறு கேட்டதாகவும் விண்ணப்பத்தை பெற்று திகதி ஒன்று உங்களுக்கு பின்பு தீர்மானித்து அனுப்புவதாக கூறியனுப்பினராம் அங்குள்ள இளைஞர் சேவையாற்றுவோர்கள்.

நவீன ஆயுதங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தாகவும், இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பும் அன்றைய தினமே அங்கு நடைபெற்றது. 910 சிங்கள இளைஞர்கள் சேர்ந்ததாகவும் தகவல். வானொலி விளம்பரம் ஒன்றைக் கூறியது. ஆனால் நடந்ததோ ராணுவ ஆள்சேர்ப்பு. இதனால் ஏமாற்றப்பட்டவர்கள் தமிழ் இளைஞர்கள்தான்.

## 12ம் பக்கத் தொடர்... பச்சைப் பேரினவாதிகளின்

சட்டத்திற்கு உட்பட்ட தீர்வு என்பதுடன் புலிகளுடன் பேச வேண்டும் என்று கூறி வருகிறார். இறுதியாக சமச்சீரற்ற அதிகாரப் பரவலாக்கம் பற்றி இப்போது பேச்சுக் கிளப்பப்பட்டு வருகிறது. அத்துடன் காமினி திசநாயக்காவின் தீர்வுத்திட்டம் என்றும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் குரல் கிளம்பியுள்ளது.

இவையாவும் நேர்மையான குரல்களோ நீதியான செயல்களுக்கோ அல்ல என்பதே உண்மை நிலையாகும். எப்படியும் அதிகாரத்தை மீண்டும் பெற்று விட வேண்டும் என்ற துடிப்பேயாகும். அக்கட்சிக்குள் ஓரிருவர் அரசியல் தீர்வுக்கு சார்பு நிலை தெரிவித்து வருவதைப் பெரும்பாலோனோர் எதிர்கின்றனர். அவர்களது அடிப்படை பேரினவாதமாக உள்ள போதிலும் வெளியில் இவ்வாறு வாதிடுகிறார்கள் என அறிய முடிகிறது. அதாவது இந்த ஆட்சியின் மூன்று வருட ஆட்சி முடிந்து விட்டது. இன்னும் மூன்று வருடமே எஞ்சி உள்ளது. இப்போதிருந்தே அதனை பலவீனப்படுத்தி வீழ்த்தும் வேலைகளில் ஈடுபடுவதை விட்டு விட்டு தீர்வுக்கு உதவக் கூடாது என்பதேயாகும். இதனால் தான் போலும் அண்மையில் ரணில் ஓரிடத்தில் பேசும் போது, தாம் மீண்டும் பதவிக்கு வந்தால் உரிய தீர்வுத் திட்டத்தை தம்மால் முன்வைத்து நிறைவேற்ற முடியும் என்று கூறி இருக்கிறார். இவை எல்லாம் ஐக்கிய தேசியக் கட்சியின் பேரினவாத முகங்களின் பல பக்கங்களேயே எடுத்துக் காட்டுகின்றன.

இலங்கையில் வர்க்க சுகபோகங்களும் சொத்துடமை ஏற்றத் தாழ்வுகளும் நிலைநிறுத்திப் பாதுகாக்கப் படுவதற்கு இனவாதம் பேரினவாதமாக வளர்க்கப்பட்டது. ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி தத்தமது அடிப்படை வர்க்கத் தேவைகளை வலுப்படுத்துவதற்கும் அதுவே கைகொடுத்து வந்துள்ளது. இதில் பச்சை நீலம் மஞ்சள் நிறங்கள் முதன்மை பெற்று வந்துள்ளன. சிவப்பு நிறம் அவ்வப்போது அதில் சம்மந்தப்பட்டிருப்பினும் இதுவரை முழுமையாகப் பங்கு கொள்ளவில்லை. ஆனால் தற்போது ஜே.வி.பி. அந்த முழுமையைப் பெற்று விட முயன்று வருகிறது. அப்படியானால் அது உண்மையான சிவப்பாக இருக்க முடியாது. அது பச்சை நீலத்தின் மறுபக்கமாகவே இருக்க முடியும். இவ்வாறு பல்வேறு நிறங்களவாதிகளின் முகங்கள் பல்வேறு நிறங்களில் வெளிப்படும் போது இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்பது எட்டப்படக் கூடிய ஒன்றா என்று கேட்பதில் தவறு இருக்க முடியாதே!

## 1ம் பக்கத் தொடர்... வடக்கே தேர்தல் நடத்துவதால் நடக்கப் போவது...

தவறையே தற்போதைய தலைமைகளும் விடுகின்றன என்பது மட்டுமல்ல. பழைய தவறுகளால் ஏற்பட்ட விளைவுகளை விட மிகவும் மோசமான விளைவுகளையே குடாநாட்டு தமிழ் மக்கள் அனுபவிக்க வேண்டிவரும்.

தற்போது இராணுவம் கைப்பற்றிய பகுதிகளில் இராணுவ ஆட்சியே நடைபெறுகிறது. அப்பகுதியில் உள்ளூராட்சி தேர்தலை நடத்தி தெரிவு செய்யப்புடுபவர்களால் (?) இராணுவ நடவடிக்கைகளுக்கு அங்கீகாரத்தையும், அனுமதியையும், ஆசீர்வாதத்தையும் நெறி முறைகளையும் பெற அரசாங்கம் முயற்சிக்கிறது என்பது தெளிவாகிறது. தமிழ் அமைப்புகளிடம் இருக்கும் ஆயுதங்களை களைந்து அவற்றை இராணுவ பொலிஸ் பாதுகாப்புக்கும் மேற்பார்வைக்கும் உட்படுத்த நீண்ட நாட்களாகவே பிரதிபாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை கொண்டுள்ள எண்ணத்தை நிறைவேற்ற ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்தவே உத்தேச உள்ளூராட்சி சபை தேர்தலை அரசாங்கம் நடத்த முற்படுகிறது.

கொழும்பு போன்ற இடங்களிலிருந்து தமிழ் அமைப்புகளை குடா நாட்டிற்கும், ஏனைய தமிழ் பிரதேசங்களுக்கும் அனுப்பி விடுதலைப்புலிகளுக்கும் அவைகளுக்குமிடையே மேலும் முரண்பாட்டை கூர்மைப்படுத்த அரசாங்கம் எண்ணம் கொண்டுள்ளது.

அதேவேளை தமிழ் பிரதேசங்களில் இயல்பு வாழ்க்கை அமைதி நிலைநாட்டப்பட்டு விட்டதாக வெளிநாடுகளுக்கு காட்ட உத்தேச தேர்தலை அரசாங்கம் நடத்த முற்படுகிறது.


எல்லாவற்றுக்கும் மேலாக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை இழுத்தடிப்பதற்கு அல்லது கைவிடுவதற்கு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தும் உள்நோக்கத்துடனேயே அரசாங்கம் உத்தேச முயற்சிக்கிறது என்ற ஐயம் தோன்றவே செய்கிறது. இதைவிட இன்னும் பல உள்நோக்கங்களை உய்த்தறிய முடியும்.

எனவே தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் பல்வேறு விதத்திலும் பங்களிப்பு செய்த தமிழ் அமைப்புகள் தங்களின் கடந்கால நடவடிக்கைகளை சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய இக்காலகட்டத்தில் தம்மிடையே இருக்கும் விரிசல்களை அகலமாக்கும் விதத்திலும், முரண்பாடுகளை கூட்டிக் கொள்ளும் வகையிலும் பேரினவாத வஞ்சக விலைகளில் சிக்காமல் எப்படி தமிழ்மக்களின் உரிமைகளை வென்றெடுப்பது என்பது பற்றி சிந்திக்க வேண்டும். அதற்கான கொள்கைகளையும், நடைமுறைகளையும் தெளிவாக வகுக்க வேண்டும்.

அதைவிட்டு அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று உள்ளூராட்சி தேர்தலில் பங்கெடுத்தால் தமிழ் மக்களிலிருந்து அந்நியப்பட வேண்டியே வரும். உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றி உள்ளூராட்சி அதிகாரங்களைக் கூட சரிவர பயன்படுத்த முடியாது என்பதை தமிழர் அமைப்புகள் வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் நடைமுறைரீதியான அனுபவங்களை கொண்டிருக்கின்றன.

எனவே இச்சூழ்நிலையில் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடுவதும், சபைகளை கைப்பற்றுவதும் தமிழ் மக்களின் உரிமைக்ளை வென்றெடுக்க எவ்வகையிலும் உதவ மாட்டா என்பதை தமிழ் அமைப்புகள் அறியாதனவல்ல.

அதேவேளை குடாநாட்டு முஸ்லிம்களும் கூட உத்தேச உள்ளூராட்சி சபை தேர்தலை நீண்டகால நோக்கில் அணுகுவது நல்லது. முஸ்லிம் மக்கள் மீளச் சென்று குடியமர்வது தமது இழந்த வாழ்க்கையை சீரமைக்காது இருக்கும் இன்றைய சூழலில் தேர்தலில் போட்டியிடுவதற்கு இது தகுணமல்ல என்பதை உணர வேண்டும். எனவே தமிழ் அமைப்புகள் வடக்கின் உள்ளூராட்சித் தேர்தலை முக்கியத்துவப்படுத்தாது முழுமையானதும் நியாயமானதுமான அரசியல் தீர்வுக்காகத் தமது முழுப் பலத்தையும் பயன்படுத்துவதே சரியானதாகும். அதேவேளை அரசியலால் தீர்வுக்கான பேச்சு வார்த்தைக்கு புலிகள் இயக்கத்தை அழைக்குமாறு அரசாங்கத்தை வற்புறுத்துவதும் அவர்களது கடமையாகும்.



## அதிகாரத்தின் நிறம் வெள்ளை

டயனா போன பிறகு செய்திப் பத்திரிகைகட்கு ஏற்பட்ட நட்டத்தை சுசாந்திகா தான் இப்போது ஈடு செய்கிறார். விளையாட்டு வெகு வேகமாக முழு வியாபாரமாகி வருகிறது. இங்கே நாட்டிற்கான பெருமை, மற்றவர்களுடனான புரிந்துணர்வு என்றெல்லாம் விளையாட்டு வீரர்கள் பற்றிச் சொல்லப்படுகிற விடயங்களை விடப் பணமும் பிரபல்யமும் ஈவிரக்கமற்ற போட்டி மனப்பான்மையுமே எல்லா விளையாட்டு வீரர்களையும் இயக்கும் சக்திகளாகி விட்டன. இந்தச் சூழலில் சுசாந்திகா தொடர்பான விடயங்கள் அவரது தனிப்பட்ட வாழ்க்கையில் அரசியல்வாதிகளது குறுக்கீட்டால் வீண் சிக்கலாகிப் பத்திரிகைத் தீனியாகி விட்டது. அது ஒருபடி ஓயும் என்று இருந்தால் வாயைத் திறந்தாலே வம்புச்சண்டை என்ற நிலைக்குத் தன்னை வளர்த்துக் கொண்ட அமைச்சர் மங்கள சமரவீர சுசாந்திகாவை ஒரு தென்னாபிரிக்க ஆண் போன்ற தோற்றமுடையவர் என்று இழிவாகப் பேச முற்பட்டு, நிறம் பற்றியும் பால் வேறுபாடு பற்றியும் தன்னுட் பொதிந்துள்ள நிறவாத ஆணாதிக்கச் சிந்தனையை வெளிக்காட்டியுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக நெல்சன் மண்டேலாவைப் பயன்படுத்த அரசு எண்ணுவதால் அவரது சொற்கள் மீளப்பெறப்பட வேண்டும் என்று யூ.என்.பி. பிரமுகர்கள் சொல்கிறார்கள். தென் ஆபிரிக்காவின் வெள்ளை நிறவெறி ஆட்சி இன்றும் தொடர்ந்திருக்குமானால் அமைச்சர் பெண்களையும் கறுப்பர்களையும் இழிவாகப் பேசியது நியாயமாக இருந்திருக்குமா?

"வெள்ளைக்காரன் பணம் வெள்ளிப்பணம்
வெள்ளிப் பணத்துக்கு ஆசைப்பட்டு
வீரங் குலைந்தானாம் வீராண்டி"

என்ற மாதிரி அமெரிக்க எசமானர்களின் காலடிகளைத் தொழுகிற இவர்கட்கு எப்போது இந்த வெள்ளையர் மோகம் தீரும்?

## தமிழும் அரச கரும மொழி என்றாலும்...

இரத்தினபுரித் தந்தி அலுவலகத்தில் தமிழில் கொடுக்கப்படும் தந்திகள் ஏற்கப்படுவதில்லை என்ற செய்தி அண்மையில் வீரகேசரியில் வெளியானது. இது தமிழர் செறிவாக வாழும் பல தென்னிலங்கை நகரங்கட்குப் பொருந்துகிற ஒரு உண்மை. சிங்களம் மட்டுமே அரச கருமமொழியாக இருந்த போது தமிழில் செய்த சில காரியங்களை இன்று செய்ய இயலாமலாகிறதென்றால் தமிழே நாட்டின் ஒரே அரச கரும மொழியானாலுங்கூட இதே நிலைதான் தொடரும். ஏனென்றால் இன்று நாட்டின் நிசமான ஆட்சி மொழி ஆங்கிலமாகிவிட்டது. அதை நடைமுறைப்படுத்துவது பௌத்த - சிங்களப் பேரினவாத நிருவாகம். எனவே இந்த நிலை மாறாமல் தமிழ் மட்டுமல்ல சிங்களமும் கூட 1960களூடு 70கள் வரை சமூகப் பாவனையில் கண்ட விரிவாக்கம் தொடர இடமிராது. மற்றப்படி, தேசியவாதிகள் பலர் தாய்மொழி பற்றிப் பேசுவதெல்லாம் வெறும் பம்மாத்தே.

## யூ.என்.பியின் புதிய நாட்டுப்பற்று

அயல் நாட்டுத் துணி உற்பத்தி மீதான தீர்வையைக் குறைப்பதாக அரசாங்கம் எடுத்துள்ள முடிவு உள்நாட்டுத் தொழிலைப் பாதிக்கும் என்பது பற்றி இடதுசாரிகளும் முற்போக்குச் சக்திகளும் கூறுவதில் வியப்பு எதுவுமில்லை. ஆனால் பதினேழு ஆண்டுகளாக நாட்டின் பொருளாதாரத்தை உலகச் சந்தையின் எசமானர்களிடம் அடகு வைத்து இழந்து வந்த யூ.என்.பி. அதுபற்றித் தெரிவிக்கும் கண்டனம் நம்மைச் சிரிக்க வைக்கிறது. ஏகாதிபத்திய எதிர்ப்புப் பேசி ஆட்சிக்கு வந்த இந்த ஆட்சி யூ.என்.பியின் அடிச்சுவட்டிலேயே தொடருகிறது. அதற்காக அதைப் பாராட்டாமல் யூ.என்.பி. ஏன் கண்டிக்க வேண்டும். யூ.என்.பி. செய்ய மறந்த எந்தத் தேசத் துரோகத்தையும் செய்ய மக்கள் கூட்டணி ஆட்சிக்கோ வேறெவருக்குமோ உரிமை இல்லை என்பது தான் அவர்களது கருத்தா? அமெரிக்கா ஏகாதிபத்தியத்தின் அன்புக்குரிய ஆட்சியாக இன்றைய ஆட்சி அமைந்துவிட்டது பற்றிய சக்காளத்திச் சண்டையில் யூ.என்.பி. இறங்கி விட்டதே ஒழிய, நாடு எக்கேடு கெட்டாலும் அதற்குக் கவலை இல்லை.

## குட்டிக் குட்டிக் குனிதல் குறைகிறது

1970 அளவில் ஸைமன் நாவகத்தேகம தயாரித்தளித்த சிங்கள நாடகம் ஒன்றில் தன் எசமானனின் எடுபிடியாக இருந்து எல்லா அடக்குமுறைகளையும் ஆதரித்த ஒரு கதாபாத்திரம் ஒரு நாய் போலச் சித்திரிக்கப்பட்டது. எசமானனின் பின்னால் வாலைக் குழைத்து வந்த நாய் நாடகத்தின் இறுதியில் எசமானனை எதிர்த்துக் குரல் கொடுத்துக் குரைத்துப் பாய்கிறது. மலேசிய அரசாங்கமும் ஏகாதிபத்திய ஆதரவுடன் 1940 - 50 களில் கம்யூனிஸ்ட்டுகளைக் கொன்றொழித்து அதிகாரத்திற்கு வந்து அந்நிய முதலீட்டை வரவேற்று நாட்டைத் 'திறந்து விட்ட' ஒரு அரசாங்கம் தான். ஆயினும் அமெரிக்க அரசாங்கம் நேரடியாகவும் மறைமுகமாகவும் மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளது பொருளாதாரத்தைப் பலவீனப்படுத்த எடுக்கும் முயற்சிகளின் விளைவாக, மலேசியப் பிரதமர் இன்று அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தியுள்ளார்கள். உள்நாட்டில் முதலாளித்துவ ஆட்சிமுறையே தொடர்ந்தாலும் மலேசியாவின் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலைப்பாட்டை கியூபா ஆட்சித் தலைவர் கஸ்ற்ரோ வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

நன்றி - நூலகத்திட்டம்




# புதிய பூமி

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

S - 47, 3வது மாடி
கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி
கொழும்பு - 11
தொலைபேசி :435117, 335844


## காணாமல் போனோரும் சிறையில் வாடுவோரும்

கடந்த அரசாங்க காலத்தில் ஜனநாயக மனித உரிமை மீறல்கள் உச்ச நிலையை அடைந்திருந்தன என்பது எவருக்கும் எடுத்துக் கூறி விளக்க வேண்டியதில்லை. அன்று கொல்லப்பட்டோர், காணாமல் போனோர், சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டோர், சித்திரவதைகளுக்கு உள்ளாகிப் புதைக்கப்பட்டோர் என்பவர்களுக்காக பாரிய குரல் கொடுத்து நின்ற ஜனநாயக முற்போக்கு புரட்சிகர சக்திகள் பல மட்டங்களிலும் இருந்து வந்தனர். அவர்களில் ஒரு பகுதியினராகவே இன்றைய ஆளும் பொதுசன ஐக்கிய முன்னணியினரும் நின்றனர். அவர்களது இறுதி இலக்கு அதிகாரத்திற்கு வருவதாகக் காணப்பட்ட போதிலும் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளும், அநீதிகளும் அம்பலப்படுத்தப்படுவதற்கு அவர்கள் ஒரு பிரச்சார காரணமானவர்களாகத் திகழ்ந்தனர். அத்துடன் தாங்கள் பதவிக்கு வந்தால் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் மீட்டெடுத்து நிலை நிறுத்துவதாக வாக்குறுதியும் அளித்திருந்தனர்.

ஆனால் அவர்களது வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட்டன. பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்ந்தும் இவர்களால் பின்பற்றப்படுகிறது. அச்சட்டத்தை வைத்துக் கொண்டே யுத்தம் நடாத்தப்படுகிறது. தமிழர் போராட்டத்திற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியால் கொண்டு வரப்பட்ட அக் கொடிய சட்டம் மிக விரைவாகவே சிங்கள மக்களுக்கு எதிராகவும், தாராளமாக அன்று பயன்படுத்தப்பட்டது. சிங்கள தமிழ் மக்களுக்கு எதிராக பிரயோகிக்கப்பட்டு வந்த மேற்படி சட்டத்தினால் லட்சத்திற்கு மேற்பட்ட தமிழர் சிங்களவர் கொல்லப்பட்டனர். பல்லாயிரம் பேர் வரை காணாமல் போயினர். சிறைகளில் விசாரணை இன்றி அடைக்கப்பட்டனர். இக் கொடூர நிலை மாற்றப்படும் என்றே இன்றைய அரசாங்கத்தைப் பதவிக்கு மக்கள் கொண்டு வந்தனர்.

ஆனால் இன்றைய நிலைமை என்ன? பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழர்கள், தமிழர்கள் என்ற காரணத்திற்காக பல்வேறு ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இதுவரை வடக்கே குடாநாட்டில் மட்டும் எழுநூற்றி ஐம்பது பேர் வரை காணாமல் போய் உள்ளனர். அவர்களுக்கு என்ன கதி ஏற்பட்டுள்ளது என்பதை தெளிவாகக் கூறக் கூடிய நிலையில் அரசாங்கம் இல்லாதிருக்கின்றது. காரணம் யுத்தத்தை நடாத்தும்படி கட்டளை இட்டு அதற்கு உற்சாகமூட்டி வரும் அரசாங்கத்தினால் எவ்வாறு தனது ராணுவம் காணாமல் போகச் செய்த செயலைக் கண்டு பிடிக்க முடியும். ராணுவம் குடாநாடு முழுவதையும் கைப்பற்றிய பின்னரே இவ் எழுநூற்றி ஐம்பது பேர்வரை காணாமல் போயினர். இவர்களது கதி பற்றி சர்வதேச மன்னிப்புச் சபை 'கொல்லப்பட்டிருக்கலாம்' எனக் கூறி உள்ளது. ஒரு வெளிநாட்டு மனித உரிமை அமைப்பு இவ்வாறு தெரிவித்த பின்பும் தமது சொந்த நாட்டு மக்களின் கதி பற்றி எடுத்துக் கூறுவதற்கு இந்த அரசாங்கத்தினால் முடியவில்லை என்றால் ஜனநாயகம் மனித உரிமை பற்றிப் பேசுவதற்கு என்ன அருகதை உண்டு.

அடுத்து தமிழர்கள் என்பதற்காகவே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் ஆயிரம் பேருக்கு மேல் பல சிறைச்சாலைகளிலும் தடுப்பு முகாம்களிலும் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீது வழக்குத் தொடுக்கப்படாமலே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அடைக்கப்பட்டுள்ளனர். ஒன்றில் அவர்கள் மீது வழக்குத் தொடர வேண்டும் அல்லது விடுதலை செய்யப்படல் வேண்டும். அண்மையில் மகசீன் சிறையில் மேற்குறித்த கோரிக்கையை வைத்து உண்ணாவிரதமிருந்த தமிழ்க் கைதிகள் தாக்கப்பட்டுள்ளனர். களுத்துறைச் சிறைச் சாலைக்கு பலாத்காரமாக மாற்றப்பட்டும் உள்ளனர். எந்த விதமான குற்றச்சாட்டையும் ஆதாரபூர்வமாகச் சுமத்தி தண்டனை பெற்றுக் கொடுக்க முடியாத கையறு நிலையிலேயே வெறுமனே சிறையில் வைத்து வாட்டி வதைக்கும் உள்நோக்கத்துடன் இச்சிறை வைப்பு நீடிக்கப்படுகிறது. இத்தகைய வாட்டி வதைப்புக்கள் அடக்கு முறைகளுக்கு எதிரான வன்மத்தை மேலும் அதிகரிக்குமே அன்றி குறைக்க மாட்டாது. ஆட்களைக் காணாமல் போகச் செய்வதும் சிறைகளில் வைத்து வதைப்பதும் அல்லது யுத்தத்தை முழு மூச்சாக முன்னெடுப்பதும் தமிழர் பிரச்சினையின் தீர்வுக்கு எவ்வகையிலும் உதவப் போவதில்லை என்பதை அரசாங்கம் ஒருபோதும் உணர மாட்டாது. ஏனெனில் ஆளும் அதிகார வர்க்கத்திற்கு இவை எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கேயாகும்.

எனவே ஜனநாயகம் மனித உரிமை சுயநிர்ணய உரிமைகளை வென்றெடுப்பதற்கான மக்கள் இயக்கங்களைக் கட்டியெழுப்பி முன்னெடுத்துச் செல்வதே சரியான வழிமுறையாகும்.

- ஆசிரியர் குழு

## மலையகப் பா.உ.களின் சொல்லும் செயலும்

-- ம. அழகேசன் --

இன்றைய பாராளுமன்றத்தில் மலையகத்தின் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை பத்து பேராகும். இதுவரை மலையகத்தில் இருந்து தெரிவான தொகையில் இதுவே ஆகக் கூடியதாகும். எதிர்காலத்தில் இந்தளவு தொகையான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவதற்கு பேரினவாத அரசியல் சக்திகள் இடம் வைப்பார்களா என்பது கேள்வியேயாகும். எப்படியும் ஏதாவது தேர்தல் முறையை நடைமுறைப்படுத்தி இதனைக் குறைக்கவே விரும்புவர். இப்பத்துப் பேரில் ஒருவர் முழு அமைச்சர். அடுத்தவர் ம.ம.முன்னணியைச் சேர்ந்தவர். மிகுதி ஒன்பது பேரும் இ.தொ.கா. வைச் சேர்ந்தவர்கள். இவர்கள் எல்லோரும் பாராளுமன்றத்தில் ஒன்றுபட்டு செயலாற்றுவது எனவும் ஏற்கனவே முடிவும் செய்திருந்தனர். ஆனால் இதுவரை இத்தகைய பலத்தைப் பயன்படுத்தி உருப்படியான எந்த ஒரு காரியத்தையும் மலையக மக்களுக்கு இவர்கள் செய்யவில்லை என்ற பாரிய அதிருப்தி பரவலாகவே மலையகத்தில் இருந்து வருவதை கேட்க முடிகிறது. மக்களது அதிருப்தியே கடந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் இவர்களுக்கு முகத்தில் வீழ்ந்த அடியாகவும் அமைந்தது.

ஆனாலும் இவர்களுக்கு ரோசம் வந்ததாகத் தெரியவில்லை. மக்களைக் குறைகூறித் திட்டுகிறார்களே தவிர தமது முகங்களையும் கைகளையும் சுய விமர்சனத்துடன் பார்க்க மறுக்கிறார்கள். தமது பழைய பூர்வீகத்தை எடுத்துக் கூறி மக்கள் தங்களுக்குப் பின்னால் தலையாட்டி மாடுகள் போல் இருந்து பாரம் இழுத்து வந்ததை நினைவுபடுத்தி இன்று ஏன் வழி தவறி நிற்கிறார்கள் என்று கேட்கிறார்களே தவிர மக்கள் கேட்கும் கேள்விகளுக்கு உரிய பதிலிறுக்கத் தயாராக இல்லை.

அரசாங்கத்தின் அவசரகால்ச் சட்டம் முதல் சகல நன்மை தீமைகளுக்கும் தவறாது கைகளை உயர்த்தி விசுவாசம் தெரிவித்து வரும் இப் பா.உ.கள் ஒரு சந்தர்ப்பத்திலாவது மலையக மக்களை மனதில் கொண்டு கை உயர்த்த மறுத்ததில்லை.

இன்றைய மலையகத்தில் மக்கள் ஏகப்பட்ட பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகிறார்கள். சம்பளம் போதாமை, வேலை நாட்கள் குறைப்பு, பெயர் பதிய மறுப்பு, சேமலாப நிதி மோசடி, லாபப் பங்கு ஏய்ப்பு விலை உயர்வால் பாதிப்பு, கல்விக்கு முட்டுக்கட்டை, அடையாள அட்டை பெறுவதில் தாமதம் உட்பட இனரீதியான பிரச்சினைகள் மக்களின் கழுத்துக்களை நெரித்து வருகின்றன. ஆனால் இவை எல்லாம் நம்ம பா.உ.களுக்கு உறைப்பதும் இல்லை உணர்ந்து கொள்வதும் இல்லை. அரசாங்கம் முன் வைத்துள்ள தீர்வுத்திட்டத்தில் மலையக மக்களுக்கு என்ன இருக்கிறது கேட்டால் இந்த பா.உ.கள் சும்மா குட்டையைக் கிளப்ப வேண்டாம் என்கிறார்கள். மலையக மக்களுக்கு அவர்களது இன வர்க்க தனித்துவங்களை நிறைவு செய்வதற்கான தனியான ஒரு அமைப்பு ஏன் கேட்கக் கூடாது என்றால் அதற்கு இப்போது அவசியமில்லை என்கிறார்கள். சரி அதுதான் ஒருபுறத்தில் இருக்கட்டும் சம்பளப் பிரச்சினையில் எதைப் பெறப் போகிறார்கள். பேச்சுவார்த்தையில் சதக் கணக்கிலா அல்லது ஓரிரு ரூபாய்கள் என்ற நிலையில் கம்பனிகளைத் திருப்திப்படுத்துவதிலேயே கவனமாக இருப்பார்கள் என்பதையே எதிர்பார்க்கலாம். இது முன்னைய அனுபவங்களில் இருந்து பெற்றவையாகும்.

அரசாங்கம் வரவு செலவுத் திட்டத்தில் பத்துக் கோடி ரூபாய்களை மலையக உள்ளக கட்டமைப்புகளுக்கு ஒதுக்கியுள்ளது. உள்ளக கட்டமைப்பு அமைச்சர் தொண்டமான் இதனால் குளிர்ச்சியடைந்து அதையே தூக்கி மலையக மக்களுக்கு காட்ட வசதி கிடைத்துள்ளது. இது எந்தளவிற்கு மக்களுக்குப் பயன்படப் போகிறது. அல்லது யார் யாரின் கைகளுக்கும் பைகளுக்கும் போகப் போகிறது என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டியுள்ளது.

அமைச்சர் தொண்டமான் தனது வழமையான வெள்வெருட்டுப் பாணியில் தை மாதத்தில் வேலை நிறுத்தம் என்று கூற ஆரம்பித்து விட்டார். இடையிடை இப்படிக் கூறாது விட்டால் வியாபாரம் படுத்துவிடும் அல்லவா? அவரிடம் கற்ற வித்தையை ம.ம.முன்னணி மறியல் போராட்டம் என்று கூறி மற்றொரு வெள்வெருட்டுப் போராட்டம் நடாத்தி வருகிறார்கள். பாராளுமன்றத்தில் சகலதிற்கும் ஆதரவு தெரிவித்து கை உயர்த்தும் ஒரே ஒரு உறுப்பினர் மலையகத்தின் வீதி மறியலில் அரசாங்கத்தை எதிர்ப்பது போல் கை உயர்த்தி முழக்கமிடுகிறார். மலையகத்திற்கும் பாராளுமன்றத்திற்கும் உள்ள தூரம் ஆயிரக்கணக்கான கி.மீ. அல்ல. மக்கள் அவ்வளவிற்கு எதனையும் அறியாத முட்டாள்களும் அல்லர். இவைகள் மக்கள் பிரச்சினைகளுக்காகவா அன்றி அண்மித்து வரும் தேர்தல்களுக்காக என்பதே மலையகத்தில் மக்கள் கேட்கும் கேள்வியாகும்.

அமைச்சர் தொண்டமானும் இ.தொ.காவும் மலையகத்தில் தொழிற் சங்க உரிமை வாரத்தை தொடக்கி வைத்து உரையாற்றி இருக்கிறார்கள். அட்டனில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் தோட்டத் தொழிலாளர்களுக்கு எவ்வித வாக்குறுதியையும் வழங்கவில்லை. அதற்குப் பதிலாக தமது அந்திய கால ஆசையையும் விருப்பத்தையுமே வெளியிட்டுள்ளார். 50 ஆண்டுகள் தொழிற்சங்கத் தலைவராக இருந்து சேவை ஆற்றியுள்ளேன். தற்போது 85 வயதாகிறது. அமைச்சராகவும் உள்ளேன். இச் சந்தர்ப்பத்தில் தொடர்ந்தும் தொழிற்சங்க வாதியாக அல்லாது அமைச்சராக இருந்து சேவை செய்யவே விரும்புகிறேன். அப்படி அமைச்சராக தொடர்ந்தும் இருப்பேனாகில் இன்னும் பல வருடங்கள் உயிரோடு இருக்க முடியும் என நம்புகிறேன் எனக் கூறித் தனது இறுதிக்கால விருப்பத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். மேலும் மலையக மக்கள் எல்லோருக்கும் ஆமாம் சாமி போடும் நிலையில் இருப்பதால் தான் ஐக்கியம் குன்றியுள்ளதாகக் கூறி என்றென்றும் என்ன நடந்தாலும் இ.தொ.காவிற்கு மட்டும் ஆமாம் சாமி போடும் நிலையில் இருக்க வேண்டும் எனவும் வற்புறுத்தியிருக்கிறார் அமைச்சர்.

இப்படி எல்லாம் கூறி மலையக மக்களிடையே ஒரு பிரசார இயக்கத்தை ஆரம்பித்து இருப்பது அடுத்து மாகாண சபைத் தேர்தலிலாவது இழந்து போன செல்வாக்கை மீட்டுக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையிலேயே ஆகும். எல்லாம் அர்த்தங்களோடுதான் செய்யப்படுகின்றன. ஆனால் இவற்றை மலையக மக்கள் உரிய முறையில் எடை போட்டு வருகிறார்கள் என்பதை இவர்கள் கவனிப்பதில்லை.

பாராளுமன்றத்தில் இடம் பெற்ற வரவு செலவுத்திட்ட விவாதத்தில் இந்தப் பத்து பா.உ.களில் யாராவது ஒருத்தராவது மலையக மக்களது அடிப்படைப் பிரச்சினைகளை காத்திரமானதும் புள்ளி விபர அடிப்படையிலும் பேசி இருக்கிறார்களா? அந்த பேச்சின் மூலம் எதையும் சாதிக்காது விடினும் நம்ம மக்களின் கடுமையும் கொடுமையும் நிறைந்த வாழ்வு நிலையை ஊர் உலகு அறியவாவது வைத்திருக்கலாம். ஒதுக்கப்பட்ட நேரத்தில் அங்கொன்று இங்கொன்றாக ஏதோ பேச வேண்டும் என்பதற்காக இந்த பா.உ.கள் பேசினார்களே தவிர பயன்தரும் ஒரு பேச்சைத் தானும் நிகழ்த்தவில்லை. இதனால் முழு நாட்டிற்கும் எமது பிரச்சினைகள் எவை என்பதை தெளிவுபடுத்தும் ஆற்றல் இந்தப் பா.உ.களுக்கு இல்லை என்பதையே எடுத்துக் காட்டியுள்ளது.

இவர்களைக் குறை கூறிப் பயன் ஏதும் இல்லை. இவர்களை மீண்டும் மீண்டும் நம்பி நம்பி நட்டாற்றில் நிற்கும் நம்மவர்கள் மீது தான் குறை கூற வேண்டியுள்ளது. எனவே சரியான ஒரு அரசியல் மார்க்கம் தேடப்படல் வேண்டும். அதில் உறுதியாக நின்று முன்னே செல்ல வேண்டும். வெறும் தலைவர்களால் எதையும் சாதிக்க முடியாது. சரியான அரசியல் மார்க்கமும் அதனுடன் அணிதிரளும் மக்கள் அணிகளும் தான் தமக்குரிய தலைவர்களை உருவாக்க முடியும். அத்தகைய தலைவர்கள் தான் உண்மையான மக்கள் சேவகர்களாக இருப்பார்கள். அத்தகையவர்கள் இன்றைய பா.உ.கள் போல் நிச்சயம் இருக்க மாட்டார்கள்.

நன்றி - நூலகத்திட்டம்



## தலைநகரில்



# சோதனையும் வேதனையும்

தலைநகர் கொழும்பில் தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காகத் தமிழர்கள் படும் அவலங்களுக்கு அளவே இல்லை என்ற நிலையே காணப்படுகிறது. பாதுகாப்பு என்ற பெயரில் வீதிச் சோதனை முதல் வீட்டுத் தேடுதல் வரை தமிழ் மக்கள் இம்சிக்கப்பட்டு வருகிறார்கள். இதற்கு வயது வேறுபாடோ ஆண் பெண் வித்தியாசமோ எதுவும் இருப்பதில்லை. சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவகையில் சகல ஆவணங்களும் அடையாளப்படுத்துவதற்குரிய அத்தாட்சிகளும் இருந்த போதிலும் சந்தேகப் பேர் வழிகளாக ஏற்றிச் செல்லப்படுகிறார்கள். முன்பு ஒரு குறிப்பிட்ட வயதினர் மட்டுமே கூட்டிச் செல்லப்பட்டு அடைத்து வைத்து விசாரிக்கப்பட்டனர். ஆனால் இன்று அந்த நிலை இல்லை. தமிழர்களுக்கான பெயர் ஊர் மட்டும் இருந்தால் போதுமானதாகும். அவர் வடக்கு கிழக்கைச் சேர்ந்தவராக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. மலையகமோ தென் இலங்கையோ கொழும்பின் பிறந்து வளர்ந்தவராகவோ இருப்பதையிட்டு பாதுகாப்புப் படையினருக்குப் பிரச்சினை இல்லை. அவர்களது ஒரே பிரச்சினை தமிழர் என்ற அடையாளம் மட்டுமேயாகும்.

வீடுகள் வீதிகள் விடுதிகள் கடைகள் வேலைத்தலங்கள் அனைத்திலிருந்தும் தமிழர்கள் பாதுகாப்பு படைவாகனங்கள், பஸ்கள், லொறிகள் என்பனவற்றில் ஏற்றிச் செல்லப்பட்டு பொலீஸ் நிலையங்களிலே அடைக்கப்படுகிறார்கள். சிறிய கூண்டுகளிலே பெருந்தொகையானோர் வைத்துப் பூட்டப்படுகின்றனர். ஏற்கனவே கொலை கொள்ளை போதை வஸ்து காரணங்களுக்காக அடைத்து வைக்கப்படுபவர்களுடனேயே இந்த 'தமிழ்ச் சந்தேக' மக்களும் அடைக்கப்படுகின்றனர். அடையாள அட்டை, பாஸ்போட் பொலீஸ் பதிவு, தேர்தல் வாக்காளர் பதிவு, வேலைத்தல அடையாள அட்டை என்பன இருந்தும் 'நீ சந்தேகப் பேர்வழி' என்று கூறியே அடைக்கப்படுகின்றனர். இவ்வாறு அடைத்து வைக்கப்படுபவர்கள் அடிக்கப்படுகின்றனர். தூஷிக்கப்பட்டு அவமானப்படுத்தப்படுகிறார்கள். விசாரணை என்ற பெயரில் ஒருவரின் சொந்த வாழ்க்கை யாவும் கிண்டிக் கிளறப்படுகிறது. இங்கே அடிப்படை உரிமை என்பதெல்லாம் கணக்கெடுக்கப்படுவதில்லை. ஒரு தமிழரிடம் உள்ள கடிதங்கள் தொடக்கம் வைத்திருக்கும் பணம் வரை விசாரிக்கப்படுகிறது. கடிதங்களில் இருக்கும் வசனங்களுக்கு அர்த்தங்கள் என்ன என்று கேட்கப்படுகிறது. ஏன் இவ்வளவு பணம் என்று மிரட்டப்படுகிறது. இங்கு வந்து எவ்வளவு நாட்கள், ஏன் வந்தாய் எப்படி வந்தாய் ஏன் இன்னும் போகவில்லை என்றெல்லாம் விசாரணையில் விலாவாரியாகக் கேட்டு வைக்கப்படுகிறது. உடல் ரீதியான பாதிப்புகள் மட்டுமன்றி உளரீதியான ஆழமான வடுக்கள் ஏற்படுத்தப்படுகின்றன. ஒருவரைக் கைது செய்தால் இருபத்திநான்கு மணி நேரத்திற்குள் நீதி மன்றத்தில் நிறுத்த வேண்டும் அல்லாது விடுதலை செய்ய வேண்டும் எனச் சட்டம் கூறுகின்றது எனக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் அதுவெல்லாம் தமிழர் பிடிபடுதலில் பின்பற்றப்படுவதில்லை. யாராவது சட்டம் பேரினால் அதை எல்லாம் மட்டம் தட்டக்கூடிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் உள்ள தடுத்து வைத்தல் என்ற ஆயுதம் தூக்கிக் காட்டப்படுகிறது. அதன் கீழ் இன்று ஆயிரம் பேருக்குமேல் விசாரணை இன்றி தடுப்புக் காவலில் தமிழர் இருந்து வருகிறார்கள். இவ்வாறு தடுத்து வைத்திருப்பவர்களைப் பார்வையிடுவதற்கு வரும் பெற்றோரும், மனைவிமார், பிள்ளைகள், உறவினர்கள் கண்ணீர் விட்டு கதறி அழும் காட்சி கல் நெஞ்சர்களையும் கரைய வைப்பதைக் காணமுடியும். ஆனால் நமது நாட்டு பொலிசுக்கோ பாதுகாப்புப் படையினருக்கோ அது இறுகிப் போன ஒன்று தான்.

இன்று தலைநகரில் தமிழர்களைப் பிடித்துச்செல்ல பொலீசார், சிடிபி பொலிசார், சிஐடி பொலிசார் இராணுவத்தினர் கடற்படையினர் எனப் பல பிரிவினர் இருபத்திநாலு மணிநேரமும் செயல்படுகிறார்கள். மாறாக எல்லைக்குள் வீதிகளில் கட்டாக்காலி நாய்களைப் பிடித்துச் செல்வதற்கு மாநகரசபை ஆட்களை வைத்திருக்கிறது. அதற்கு சட்டமும் உண்டு. அதாவது வீதியில் நின்றால் மட்டுமே அவற்றைப் பிடிக்க முடியும். வீட்டினுள் நிற்கும் எந்த நாயையும் பிடிக்க முடியாது. அப்படிப் பிடித்தால் அது கடும் குற்றம். ஆனால் தலைநகர் தமிழர்களைப் பொறுத்து அந்த நாய்களுக்கு உள்ள வரையறை கூடக் கிடையாது. எங்கும் எவ்வேளையிலும் பிடித்துச் சென்று அடைக்கலாம். எத்தனை நாள் என்றாலும் வைத்திருக்கலாம்.

தலைநகரில் வாழும் தமிழர்களில் ஒரு பகுதியினரிடம் ப்ணப் புழக்கம் இருக்கிறது என்பது இரகசியம் அல்ல. வெளிநாட்டு உழைப்பால் தமது குடும்பத்தவர் அனுப்பும் பணம் கைகளில் இருப்பதால் நம்மவர்களின் சிந்தனையும் செயல் முறைகளும் மாறியே செயல்படுகின்றதை அவதானிக்க முடிகிறது. வீண் விரயமான செலவுகளும் ஆடம்பரப் போக்குகளும் அநாவசியப் பொருட்களின் கொள்வனவுகளும் நடைபெறவே செய்கின்றன. அந்தப் பணத்திற்காக தம்மவர்கள் வெளிநாடுகளில் பட்டுக் கொள்ளும் துயர்படிந்த வாழ்க்கை பற்றி இங்குள்ளவர்கள் கவலைப் படுவதில்லை.

இத்தகைய பரகசியப் பணப்புழக்கத்தை பலரும் அறிந்து வைத்து கறக்க வேண்டிய வகையில் கறந்து கொள்வார்கள். தமிழர்கள் வியாபார நிலையங்களுக்குச் சென்றால் முச்சக்கர வண்டியில் ஏறினால், மீன்மரக்கறி சந்தைக்குச் சென்றால் விஷேச விலைகள் தான் கூறப்படும். தமிழர்களிடம் கற்றைகற்றையாக வெளிநாட்டுப் பணம் என்ற மனோநிலையிலேயே இவ் விஷேச விலை கூறப்படுகிறது. தமிழர்களும் மொழி தெரியாத காரணத்தாலும், சுயகௌரவத்தாலும் பணம் கையில் போதியளவு இருப்பதாலும் எடுத்து வீசி விட்டுப் போகும் போக்குத் தான் நிலவி வருகிறது.

இதனை பொலிசாரும் ஏனைய பாதுகாப்புப் படையினரும் நன்கு அறிந்தே தமது நடவடிக்கைகளையும் நடாத்தி வருகின்றனர். பணம் பாதாளம் வரை செல்லும் என்றால் அது நம்நாட்டுப் பாதுகாப்புப் படையினரிடம் செல்லாது என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இருக்கமாட்டாது. இது இன்று பகிரங்க இரகசியம். அதனை ஜனாதிபதியே பகிரங்கமாகச் சுட்டிக் காட்டியுள்ள போதில் அதனை எவ்வகையிலும் தடுக்க முடியவில்லை. இதற்கு தமிழர்களும் குறிப்பாக வெளிநாட்டில் உள்ளவர்களும் காரணமாகின்றனர். ஒருவனைப் பொலிசாரோ அல்லது பாதுகாப்புப் படையினரோ பிடித்து விட்டனர் என்ற செய்தி தொலைபேசி ஊடாகத் தெரிவிக்கப்பட்டதும் அடுத்த பேச்சாக மறுமுனையில் இருந்து கேட்பது எவ்வளவு காசு செலவானாலும் பரவாயில்லை ஆளை உடன் எடுக்க அலுவல் பார்க்கவும் என்பதுதான். அந்தப் பேச்சை வைத்தே சகல காரியங்களும் ஆற்றப்படும். பேரப் பேச்சுக்கள் நடாத்தப்படும். அதற்கென விடுதி நடத்துவோர் முதல் வேலை வெட்டியற்ற சில ஆசாமிகள் வரை உள்ளனர். நீதிமன்றங்களில் கூட சட்டத்தரணிகளுக்கு தமிழ் மணம் தட்டிவிட்டால் தனிவகைப் பீஸ் சொல்லிக் கறந்து விடுவார்கள். இதில் சிங்கள சட்டத்தரணிகள் மட்டும் தான் என்று தப்புக் கணக்குப் போடக் கூடாது. நமது தமிழ்ப் பெருங்குடிச் சட்டத்தரணிகளும் உள்ளடக்கம் என்பது கவனத்திற்குரியதாகும்.

இவ்வாறு தலைநகரில் இடம் பெறும் கைதுகளுக்கும் தமிழர் பணத்திற்கும் மிக நெருங்கிய தொடர்பும் பிணைப்பும் இருந்து வருகிறது. இதனால் பணப்புழக்கமற்று தமது உழைப்பில் சம்பளத்துடன் வாழ்ந்து வரும் தமிழர்களின் நிலைதான் மோசமானதாகும். கைது செய்த தம்மவரை குறுக்கு வழியில் மீட்கவோ நீதிமன்றத்தில் செலவு செய்து வழக்கு வாதாடவோ இயலாத இயலாமையால் அவர்கள் படும் துயரங்கள் பலவற்றைக் காணமுடிகிறது.

ஒட்டுமொத்தமாகவே தலைநகரில் பாதுகாப்பு என்ற பெயரில் இடம் பெற்று வரும் சோதனை, தேடுதல், கைது தடுத்து வைத்தல், அடித்து துன்புறுத்தல், லஞ்சம் பெறுதல் மற்றும் மிரட்டல்கள் ஏமாற்றுதல் போன்ற பன்முக அவலங்களால் தமிழர்கள் வெறுப்பு வேதனை விரக்தி என்பனவற்றுடனேயே அன்றாட வாழ்வைக் கழிக்கின்றனர். ஒடுக்குமுறையின் இத்தகைய வடிவங்களும் அவை ஏற்படுத்தும் ஆழமான வடுக்களும் தமிழர்கள் - மனிதர்கள் என்ற நிலையில் மாற்றுச் சிந்தனைக்குள் புக நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள் என்பதை ஆளும் தரப்பினரோ பாதுகாப்புப் படையினரோ அறிய மாட்டார்கள். பொலீஸ் நிலையம், கைதிக் கூண்டு, தடுப்புச் சிறை, நீதிமன்றம், நீண்ட சிறைவாழ்வு என்பன யாவும் ஒரு மனிதனின் உணர்வுகளை எவ்வாறு பாதிக்கும் என்பதை உணர சம்பந்தப்பட்டவர்கள் தயாரில்லை. எவ்வித குற்றமும் அற்று தமிழர் என்ற ஒரே காரணத்திற்காக ஒருவர் இத்தனையையும் அனுபவிக்கும் போது அவரது மனதில் தோன்றும் விபரீதமான சிந்தனைகளையும் முடிவுகளையும் எவராலும் தடுக்க முடியாது.

இவற்றை எல்லாம் புரிந்து கொள்வதற்கு ஆட்சியில் உள்ளவர்களுக்கு இயலாது ஏனெனில் அடக்கு முறை என்பது ஆட்சி அதிகாரத்தின் ஓர் அவசியமான அம்சமாகவே திகழ்கிறது. அதில் நல்லது கெட்டதைத் திகழ்கிறது. அதில் நல்லது கெட்டதைத் தேட இயலாது. மக்கள் தான் சரி பிழை நல்லது கெட்டது எவை என்பதை அரசியலில் தேட வேண்டும். பரந்த வெகுஜன அரசியல் போராட்டங்களில் மக்கள் அணி திரளாமல் அவற்றின் மூலவிசையாக அவர்கள் மாற்றமடையாமல் இன்றைய அவலமான அடக்கு முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாது. தமிழர்களை தமிழர் என்ற அடையாளத்திற்காகவே அடக்குகிறார்கள் என்பதுடன் மனிதர்களை மனிதர்களே அடக்குகிறார்கள் என்பதை பரந்த தளத்தில் விளங்கிக் கொண்டு எல்லாவித அடக்கு முறைகளுக்கு எதிராகவும் நின்றெதிர்க்கும் ஒரு நிலையைத் தோற்றுவிக்க வேண்டும். இதைவிட மாற்று வழி இருக்கப் போவதில்லை.

**அ.பூபதி**

## குடாநாட்டில் கண்டதும் கேட்டதும்

- பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஏழு ஆண்டுகளுக்குப் பின் திறக்கப்பட்டு பூசைகள் இடம் பெற்றன. இராணுவத்தின் அனுமதியுடன் குறிப்பிட்ட தொகையினர் கலந்து கொண்டனர். தினம் தினம் பன்னிரண்டு மணிக்கு நடைபெற உள்ள பூசையில் ஆதீன கர்த்தா - குருக்கள் - தொண்டர்கள் - பக்தர்கள் தமது சகல விபரங்களையும் இராணுவத்திடம் கொடுத்து முன் அனுமதி பெற்றே கோவிலுக்கு செல்ல வேண்டும். இதே ஆலயத்தில் முப்பது வருடங்களுக்கு முன்பு தாழ்த்தப்பட்ட மக்கள் வழிபாட்டிற்கு சென்றதை ஆதீன கர்த்தாவும் அவரது கையாட்களும் பலாத்காரம் கொண்டு தடுத்து நின்றதை இன்று நினைவு கூர வேண்டி உள்ளது. அன்று நடந்ததும் இன்று நடப்பதும் வரலாற்று விசித்திரம் தான்.
- காம லீலைகள், பாலியல் வல்லுறவு, கொலை என்பனவற்றை அற்புதத்தின் பெயரால் ஆச்சிரமம் வைத்து நடாத்தி வந்தவர் பிரேமானந்தா சாமியார். இன்று இந்தியச் சிறையில் ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் ஆசாமி ஆவார். அந்த காம லீலைச் சாமிக்கு சுன்னாகத்தில் 46 வது ஜெயந்தி தினம் பக்தி சிரத்தையோடு கொண்டாடப்பட்டுள்ளது. இத்தகைய பக்தர்களும் பக்தைகளும் இருக்கும் போது பிரேமானந்தா போன்ற காமலீலைச் சாமிகளுக்கு பஞ்சம் ஏற்படாது தானே.
- யாழ் - பல்கலைக்கழக மாணவர்களுக்கும் உதயன் பத்திரிகைக் குமிடையில் விரிசலும் முறுகலும் ஏற்பட்டது இறுதியில் சொல் வீச்சும் கல்வீச்சும் இடம் பெற்றது. குடாநாட்டின் இன்றைய அவலச் சூழலில் கவனிக்க வேண்டிய செய்யப்பட வேண்டியவை ஏராளம் உள்ளன. இத்தகைய சொல்வீச்சுகளும் கல்வீச்சுகளும் அவசியமானவையா என்றே மக்கள் கேட்கிறார்கள்.
- குடாநாட்டிலிருந்து வெளிமாவட்டங்களுக்குப் பிரயாணம் மேற்கொள்வதற்கு வயதுக் கட்டுப்பாடு கொண்டு வரப்பட்டுள்ளது. குறிப்பிட்ட வயதுக்கு உட்பட்ட இளைஞர் யுவதிகள் போதிய சான்றாதார ஆவணங்களைச் சமர்ப்பித்து அவை நுணுக்கமாகப் பரிசோதிக்கப்பட்ட பின்பே அனுமதி கிடைக்கும் எனத் தெரியவருகிறது.

நன்றி - நூலகத்திட்டம்



# பொய்த்த வாக்கும் பொதுசன முன்னணியும்

வடக்கு கிழக்கு பகுதிகளிலே யுத்தம் தொடர்கதையாய் தொடர்கிறது. உயிர்களும், உடைமைகளும் நாளாந்தம் அழிவுருகின்ற துர்ப்பாக்கியமான சூழ்நிலைகள் நிதம் நிகழ்கின்றன. இனப்பிரச்சனைக்கும் போர்ச் சூழலுக்கும் முடிவுகட்டி இலங்கை நாட்டை சமாதான பூமியாக மாற்றுவேன் எனச் சூழுரைத்து 1994 ம் ஆண்டு இன்றைய பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தது யாவரும் அறிந்ததே.

ஐக்கிய தேசிய கட்சியால் நடாத்தப்பட்ட கொடூரங்களுக்கு முடிவு கட்டவென புறப்பட்டதாக ஆதங்கப்படும் இந்த பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்த காலப் பகுதியிலிருந்து பெருந்தொகையான ஆயுதங்களையும், புதிய புதிய இராணுவ நடவடிக்கைகளிலும் ஈடுபட்டதை யாவரும் மறுக்க முடியாது. ஆனால் மாற்றங்கள் வேண்டும் எனவும், ஜனநாயக அரசாங்கமாக அமையும் எனவும் விடிவெள்ளி தோன்றி விட்டதாகவும் எண்ணி மக்கள் இறுமாப்பிலும் இருந்து, பொதுசன ஐக்கிய முன்னணியை வளர்த்தெடுத்தனர். சில தமிழ் தலைவர்களும் கூட இருந்து இவ்வரசாங்கத்தை அமைக்க உதவிகரம் நீட்டினர். குறிப்பாக மலையக மக்கள் முன்னணி தலைவர் சந்திரசேகரன் ஆதரவுடனேயே இவ்வரசாங்கம் ஆட்சியை பெற்றுக் கொண்டது. இவ்வரசாங்கம் தனது கட்சியை நிலைநிறுத்திய தன் பின்னர் சந்தர்ப்பவாத பச்சோந்திகள் இவ்வரசாங்கதோடு ஒட்டிக் கொண்டனர். தேர்தல் கால வார்த்தைகள் நிறை வேற்றப்படாத சூழலிலும் எவ்வித தளர்வும் இன்றி இவ்வரசாங்கம் தொடர்ந்தும் ஆளப்பாக்கிறது.

''பயங்கரவாதிகள்'' என்ற போர்வையில் சமூக உணர்வுகளை மதியாது! தமிழர்களையும் புலிகளையும் வேறுபடுத்தி தமிழர்களை அழித்துவிடும் முயற்சிகளினையே அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. அச்சூழலிலும் ஏறக்குறைய 27 தமிழ் உறுப்பினர்கள் பாராளுமன்றத்திலிருந்தும் இவ்வரசாங்கத்தின் போக்குகளுக்கு ஏற்ப நடனம் ஆடுபவர்களாகவே திகழ்கின்றனர். பாராளுமன்ற சலுகைகளிலே திளைத்திருப்பவர்களுக்கு சமூக உணர்வுகள் எங்கே இருக்கப்போகின்றது?

ஒருமித்த குரல் மூலம் அரசாங்கத்தை பணிய வைக்க முடியும் என்பது உறுதியானதே. இருந்தும் பாராளுமன்ற பதவியை பயன்படுத்தி தமது சொந்த வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ளவே அவர்கள் முனைகின்றனர். உண்மையில் இவ்வரசாங்கத்தூடாக ஒட்டிக்கொண்டுள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல யூ.என்.பி, காலப்பகுதியிலிருந்த உறுப்பினர்கள் கூட சாதித்தது என்ன? குறிப்பாக இ.தொ.கா. தலைவர் தொண்டமான் யூ.என்.பி ஆட்சி காலப்பகுதியில் பெரும் சக்தியாகவே இருந்தார். அவர் அதை பயன்படுத்தி அவர் சார்ந்த சமூகத்திற்கு பெற்றுக் கொடுத்த சலுகைகள் எவை? உரிமைகள் என்ன? இப்போதும் அவர் சாதித்துக் கொண்டிருப்பது தான் என்ன? இவ்வரசாங்கம் தான் தமிழர்களுக்கு கொடுத்த சலுகைகளை யாவை?

நாட்டிலேயே இன்னும் இனப்பாகுபாடு இனவாத நோக்கு தாண்டவமாடுகிறது என்பது வெட்டவெளியான உண்மை. அரசாங்கமும் தலைவர்களும் அதற்கு தூபமிட்டுக் கொண்டிருக்கின்றனர். வேலை வாய்ப்புகள், திட்டமிட்ட தமிழர் குடும்ப கட்டுப்பாட்டு முறை, சந்தேகம் எனும் பெயரில் தமிழ் இளைஞர்களை கைது செய்தல், தமிழர் பண்டிகை காலத்து பொருட்களின் விலையுயர்வு, வங்கிக் கடன்கள், ஜயபூமி, ஒப்பு வழங்குதல் வியாபார ஊக்குவிப்புக்கள் போன்ற காரணிகளில் காட்டும் பாகுபாட்டு முறைகள் இனவாதத்தின் முக்கிய கட்டமேயாகும். நாம் எல்லோரும் இலங்கையர் எனும் கோசமிட்டுக்கொண்டே யாவும் பெற்று வருகின்றன. ஆனால் வேலியே பயிரை மேய்வது போல பாதுகாவலர்களே தமிழர் வீடுகளில் சூறையாடுவதும் கொலைகளை செய்வதும் தொடர்கின்றன. மலையகத்தில் ஆங்காங்கே இவை நடைபெறவே செய்கின்றன.

மலையகத்தில் குறிப்பிட்ட இடங்களில் திட்டமிட்ட குடியேற்றத்தை அமைப்பதில் இவ்வரசு மும்முரமாக உள்ளது. உலக மயமாக்கலின் மோகத்தால் நம்நாட்டு சொத்துக்களை அபகரிக்கும் கயவர்களுக்கும் தனியார்களுக்கும் நாட்டு உடமைகளை தாரைவார்ப்பது நடைபெறுகிறது. நாட்டு சொத்துக்களை பேணுவோம் எனக்கூறியவர்கள் அரச கட்டுப்பாட்டிற்குள் இருக்கக் கூடிய சேவைகளைக்கூட தனியாருக்கு கையளித்துவருவது கண்டிக்கத்தக்க செயலாகும்.

இதன் பாதிப்புக்களை மக்கள் குறுகிய காலத்திலேயே அனுபவிக்கின்றனர். 1970 ம் ஆண்டு காலப்பகுதி பஞ்சம் நம்மை ஆட்கொண்டு விடுமோ எனும் பீதியில் மக்கள் உள்ளனர், தொழிலாளர்களின் கஷ்டங்களை மறந்து அமைச்சர்களுக்கும், வைத்தியர்களுக்கும் மட்டும் சம்பள உயர்வு வழங்குவது என்ன நியாயம்? இன்றைய ஆட்சியினரும் அவர்களது சகவாடிகளும் உல்லாச வாழ்வு நடத்துவது யாருடைய உழைப்பில்? அப்படியிருக்க ''அதிகார பரவலாக்கல் மூலம் மலையக மக்கள் அடைய போகும் நன்மைகள் என்ன? மலையக மக்கள் கொத்தடிமை இல்லை என்பதை அரசாங்கம் உணர வேண்டும். அம்மக்களது சுயநிர்ணய உரிமைகளை தொடர்ந்தும் மறுத்தால் வட கிழக்குச் சூழல் இங்கும் ஏற்பட தூண்டுவது போல் அமைந்து விடும்.

சிறுபிள்ளைத்தனமான பழிவாங்கல்கள் இந்த அரசாங்கத்தில் மிகையாக உள்ளது. தலைவர்கள் கட்சி பேதமின்றி சேவை செய்ய வேண்டியவர்கள். ஆனால் இவ்வரசாங்கம் நுவரெலியா மாவட்ட மக்கள் யூ.என்.பி. கட்சிக்கு ஆதரவு என்ற காரணத்தால் திட்டமிட்டு அவர்கள் பிழைப்பில் மண்ணை போட்டுள்ளது. மரக்கறி பயிர் விளைவுப் பிரதேசமான நுவரெலியா மக்களின் வருமானம் மிகவும் குறைக்கப்பட்டுள்ளது. கொழும்பிலுள்ள மத்திய விற்பனை நிலைய முகவர்களிடம் மரக்கறி வகைகளை மிகக் குறைந்த விலைக்கு விற்கவேண்டுமெனக் கட்டளை இடப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. உள்நாட்டு உற்பத்திக்கு முன்னுரிமை வழங்காது இறக்குமதியில் அதிகம் நாட்டம் செலுத்துதல் கண்டிக்கத்தக்கது ''நுகர்வோன் நலன் கருதி ஏற்படுத்தப்பட்ட திட்டம் இதுவானால் உரம், மருந்து, விதைகளினது விலை அதிகரிப்பையும் தடை செய்ய வேண்டும். ஆனால் மரக்கறி வகைகளினது விலை அதிகளவில் குறையும் அதேவேளை மருந்து உரங்களின் விலை அதிகளவில் ஏற்றம் அடைகின்றது.

உற்பத்தியாளனுக்கு உகந்த அரசாங்கம் என கருதி வாக்களித்தவர்கள் இன்று நொந்து கொண்டு இருக்கிறார்கள். மக்களின் வாழ்க்கையில் ஏற்றம் இல்லை. ஆனால் தலைவர்களின் ம்ந்திரிகளின் வாழ்க்கை மக்கள் போட்ட ஓட்டுகளால் உயர்கிறது. நாட்டின் சொத்துக்களை சூறையாடுவதும், போருக்கென கடன்கள் வாங்கி குவிப்பதும், நாட்டின் வளத்தை சீரழிக்கும். இன்னும் எத்தனை நாட்கள்தான் பாதையை பிடித்துவிடுவேன், பிடித்து விடுவேன் என்று கூறிக் கொண்டு இருப்பது. இந்த அரசாங்கத்தின் இயலாமை தவறுகளைப் பயன்படுத்த யூ.என்.பி. தயாராகக் காத்திருக்கிறது. மாறி மாறி இவர்களின் ஏமாற்று ஆட்சிதானா? மாற்று வழிபற்றி மக்கள் சிந்திக்க வேண்டாமா?

பச்சையப்பா

## எகிப்தில் உல்லாசப் பயணிகள் கொலை

எகிப்தில் இஸ்லாமிய தீவிரவாதிகள் உல்லாசப்பயணிகளைக் கொலை செய்ததைப் பரவலாக எல்லா நாடுகளும் கண்டித்து உள்ளன. எகிப்தின் உலக அரசியல் நிலைப்பாட்டில் ஏற்பட்ட அண்மைய மாற்றம் காரணமாக, அது பலஸ்தீன மக்கள் சார்பாகக் குரல் கொடுக்கிற சூழ்நிலையில், அந்த ஆட்சிக்கு எதிரான இவ் வன்முறையை பலஸ்தீன மக்களது ஆயுதப் போராட்ட சக்தியாக இன்று விளங்கும் ஹமாஸ் கண்டித்துள்ளமை கவனிக்கத் தக்கது. அப்பாவி மக்கள் மீதான வன்செயல்கள், பொதுவாகவே கண்டிக்க வேண்டியன. ஆயினும், அவற்றுக்கான காரணங்களையும் கணிப்பில் எடுக்கும் தேவை நமக்கு உண்டு. இத்தகைய வன்முறை மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்குமா என்பது ஒரு முக்கியமான கேள்வி. எனவே, எகிப்திய ஆட்சி இன்று நண்பனா எதிரியா என்பதை மட்டுமே வைத்து இதை மதிப்பிடுகிறவர்கள். நாளை இந்த ஆட்சி தன் நிலைப்பாட்டை மாற்றினால் என்ன சொல்வார்கள்?

## ஒரு மலையக மாணவனின் டயறி

எஸ்.உதயசூரியன்

*3.11.97 - 7.11.97*

சாப்பாட்டுச் சாமான்கள் விலை நினைத்துப் பார்க்க முடியாத அளவு கூடி விட்டது. கீழே உள்ள ஒத்தக் கடையிலும் கடன் கூடிவிட்டது என அம்மா வேதனைப்பட்டுக் கொண்டிருந்தார். திங்கள் காலைச் சாப்பாடு இல்லாமையால் பாடசாலைக்குப் போகவில்லை. தோட்டத்துரை, பெரிய பணக்காரனுங்க வீட்டுல எல்லாம் போதுமான சாப்பாடு, வசதி இருக்கிறப்போ நம்ம தொழிலாளிக வீட்டுல மட்டும் ஏன் சாப்பாட்டுக்கும் கஸ்டம்? இந்த நிலை மாறாதா? என்றபடி பலவாறாக யோசனைகள் வந்தன. அம்மாவிடம் இருந்த மூக்குத்தி இன்று அடைவு கடைக்குப் போய்விட்டது. இரவு சாப்பாடு கிடைத்தது. செவ்வாய் பாடசாலைக்குப் போனேன். வீட்டில் சாப்பாடு இல்லாதமையால் தான் திங்கள் பாடசாலை வரவில்லை என பலமுறை கூறினேன். நீ சொல்வது பொய் எனக்கூறி செல்வராஜா சேர் அடித்தார். எங்கள் தோட்டத்திலிருந்து வருபவர்களை ஏனோ இந்த ஆளுக்குப் பிடிப்பதில்லை உண்மைய சொன்னாலும் அடி, பொய்ய சொன்னாலும் அடி, தோட்டத்து ஆளுக படுற கஸ்டத்த உணராத இந்த ஆள பத்தி வேதனப்படுறத விட வேறு என்ன செய்ய முடியும் என நினைத்து அமைதியாக இருந்தேன். திங்கள் ஒரு பாடமும் நடக்கவில்லை என ரமேஸ் கூறினான். செவ்வாய் சமயப்பாடமும், புதன் தமிழ் வாசிப்பும், வியாழன் சாயிபாபா பஜனையும், வெள்ளி விளையாட்டும் இடம் பெற்றன.

*10.11.97 - 13.11.97*

திங்கள் மிகக் கடுமையான மழை பெய்தது. எங்கள் வகுப்பில் ஆறுபேர் வந்திருந்தனர். நேரத்தோடு பாடசாலை விடப்பட்டது. செவ்வாய் பாடசாலை போன போது ஒப்பீசுக்கு வெளியே மூன்று பெரிய வகுப்பு அண்ணன்மார்களை நிற்பாட்டி விசாரித்துக் கொண்டிருந்தார்கள். பாடசாலைக்குள் அரசியல் வேலை செய்ததாகவும், பத்திரிகைக்கு பாடசாலையில் நடக்கும் விடயங்களை எழுதுவதாகவும், மாணவர்களைத் 'தேவையில்லாமல்' ஒற்றுமைப்படுத்துவதாகவும் அவர்கள் மீது குற்றம் கூறப்பட்டதாக அறிந்தேன். பாடசாலைக்குள் அரசியல் செய்யக்கூடாது என 'அரைவேக்காடு' என பட்டப்பெயர் சூட்டப்பட்ட சுப்பிரமணியம் கத்திக் கொண்டிருந்தார். எனக்கு அந்த ஆளைப்பார்க்கும் போது பாவமாக இருந்தது. போன உள்ளூராட்சி தேர்தலில இந்த ஆளு பட்டபாடு. ஆடேங்கப்பா பெரியவகுப்பு அண்ணன்மார்கள எல்லாம் கூட்டி வச்சி எவ்வளவோ பொய்ய சொல்லி ஓட்டப் போட சொன்னார். இந்த ஆள நெனைக்கும் போது ஒருபக்கம் சிரிப்பாகவும் மறுபக்கம் கோபமாகவும் இருந்தது.

1. இந்த பாடசாலை அதிபருக்கு தகுதி, தரம் குறைவாக இருந்தும் அதிபராக நியமிக்கப்பட்டதற்கு காரணம், அந்த பிற்போக்குத் தொழிற்சங்கம்.
2. இங்கிருந்து சிவலிங்கம் சேரை வேறுபாடசாலைக்கு மாற்றியதற்கு காரணம். அவர் நன்றாக படித்துக் கொடுக்கிறார் என்பதல்ல, பிற்போக்கு தொழிற் சங்கங்களுக்கு எதிராக இருந்தார் என்ற காரணத்தினால்.
3. எங்க வீட்டில கடந்த வாரம் சாப்பாடு இல்லாமல் இருந்தமைக்கு காரணம் அரசியல்.
4. 'இந்த ஆளுக' எல்லாம் இப்புடி பேசுவதற்கு காரணம் அவுங்கவுட்டு அரசியல்.
5. நாம காலையில எழும்புன உடன பேஸ்ட்டுல பல்லு வேலக்கிறமா கரித்துண்டுல பல்லு வெலக்கிறமா என்பதிலிருந்து இரவைக்கு சாக்குல படுக்கிறமா? பஞ்சி மெத்தியில படுக்கிறமாங்கிறது வரையுள்ளது. அவ்வளவும் அரசியலால தீர்மானிக்கப்படுறது தானே என்று பலவாறாக சிந்தித்த வண்ணம் வகுப்புக்குப் போனேன்.

செவ்வாய் வாசிப்புப் பாடமும், புதன், வியாழன் சமயப்பாடமும் இடம் பெற்றன. வெள்ளி கிரிக்கட் விளையாடினோம்.

*17.11.97 - 21.11.97*

திங்கள் மாமா வந்திருந்தார். அதனால் செவ்வாய் கிழமையும் பாடசாலை போகவில்லை. இராகலைப் பகுதி பாடசாலையொன்றில் அதிபர் நியமனத்தில் பல சிக்கல்கள் காணப்படுவதாக கூறினார். பதவி பிடிப்பதற்காக யாழ்ப்பாணம், மலையகம் என்று பிரிந்து நின்று தங்களது பகுதிக்கு ஆதரவாக ஒவ்வொரு குழுவை அமைத்துக் கொண்டு, தொழிற்சங்க தலைமைகளின் கால்களில், வீழ்ந்து வருவதாக கூறினார். ஒற்றுமையைப் பற்றி படித்து கொடுக்க வேண்டியவர்களே, இப்படி பதவிக்காக, வேறுபட்டு நிற்பதை நினைக்கும் போது எனக்கும் கவலையாக இருந்தது அங்குள்ள மாணவர்களை நினைக்கும் போது வேதனையாகவும் இருந்தது. ஆசியென் என்பவன் 'ஆசு' - குற்றம், இரியன் - நீங்கியவன். குற்றமற்றவன் குற்றம் நீக்குபவன் என்று ஒரு புத்தகத்தில் வாசித்தது ஞாபகம் வந்தது. அப்படி என்றால் குற்றம் இழைப்பவன் ஆசிரியனா? பிரதேசவாதம் பேசுபவன். சாதி பேசுபவன் சமயம் பேசுபவன் ஏற்றத் தாழ்வு பார்ப்பவன் இவனெல்லாம் ஒரு பாடசாலையிலிருந்தால் என்ன செய்வது? மாமாவுக்கும் இந்த கேள்விக்கு பதில் தெரியவில்லை. எனக்கு பதில் தெரியும் கூறினால், அம்மாவும் மாமாவும் என்னை ஏசுவார்கள் என்பதை அறிந்து மௌனமாக இருந்தேன். புதன் பாடசாலை சென்றேன். சுற்றாடல் பாடம் இடம் பெற்றது. வியாழன் சேர்மார்களுக்கும் உயர்வகுப்பு அண்ணைமார்களுக்கும் கிரிக்கெட் போட்டி நடந்தது. வெள்ளி சமயப்பாடம் நடைபெற்றது.

*24.11.97- 29.11.97*

அம்மாவுக்கு சுகமில்லை. இதனால் திங்கள், செவ்வாய் வீட்டிலிருந்து படித்தேன். அம்மாவுக்கு பெனடோல் வாங்கிக் கொடுத்தேன். புதன் பாடசாலை போன போது செல்வராஜா சேர் என்னை அடித்தார். அம்மாவுக்கு சுகமில்லை என்று பலமுறை கூறினேன். அந்த ஆளுக்கு அது எல்லாம் விளங்கவில்லை. நீ பெரிய வாய்க்காரன் இல்லையா? என்று மீண்டும் மீண்டும் கூறி அடித்தார். அந்த ஆள் அடித்த போது வலியாகத் தான் இருந்தது. ஆனால் பின்னர் அந்த ஆளை நினைக்கும் போது மனவருத்தமாக இருந்தது. இந்த ஆளுக்கு முன்னர் மனநோய் இருந்ததாகவும் பின்னர் ஓரளவு குணமாகி விட்டதாகவும் அந்த ஆளுக்கு நாம் தான் உதவி செய்ய வேண்டும் என்றும் ரவிக்குமார் கூறினான். செல்வராஜா சேரை நினைத்து மனம் வருந்தினேன். புதன் ஒரு பாடமும் நடக்கவில்லை. வியாழன், சாயிபாபா பஜனையும் வெள்ளி வாசிப்பும் இடம் பெற்றன.

நன்றி - நூலகத்திட்டம்



*தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் தினமணி பத்திரிகையில் (11.11.97) அருண் செளரி என்பார் மாக்சியத்தை தாக்கியும் பழித்தும் இழித்தும் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதற்கு பதில் தரும் வகையில் (21.11.97) தினமணி சமூக நீதி ஆய்வாளர் மருதமுத்து என்பவருடைய கட்டுரையைப் பிரசுரித்திருந்தது. மேற்படி கட்டுரையைப் புதியபூமி இங்கே மறுபிரசுரம் செய்கிறது.*

*(ஆர்.)*

# தடுமாறும் அறிவுஜீவிகள்

சில பேருக்கு மல்லிகைப் பூவின் நறுமணம் ஒத்துக் கொள்ளாது. அந்த ஒவ்வாமை (allergy) காரணமாக அவர்கள் மிகுந்த உபாதைக்கு ஆளாவார்கள். அதற்காக மல்லிகைப் பூவை உலகம் வெறுத்து ஒதுக்கி விடமுடியுமா?

அருண்செளரி போன்ற சில படிப்பாளிக்கு சகிக்க முடியாத எரிச்சலையூட்டும் மல்லிகைப் பூவாக மணப்பது சமூக நீதி என்னும் கொள்கை, இக்கொள்கை பொதுவாக ஆதிக்கவாதிகளுக்கும் பேராசைக்காரர்களுக்கும் ஒவ்வாமைக் கோளாறை ஏற்படுத்தும் தன்மை கொண்டது.

சமூக நீதிக் கொள்கையின் சிகரத்தைத் தொட்டவர் மார்க்ஸ், ''மனித வரலாற்றில் தனிப் பெரும் உடைமையாளர்களின் ஆதிக்கத்துக்கு இனி அவசியமில்லை. அது நியாயப்படுத்த முடியாதது. அதில் நீதியில்லை'' என்றார் மார்க்ஸ், அதை நிருபித்துக் காட்டவும் செய்தார்.

மார்க்ஸின் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்குப் பல முயற்சிகள் நடந்தன. புரட்சிகள் நடந்தன. அவற்றில் வெற்றிகளும் தோல்விகளும் வந்துள்ளன. குற்றங்குறைகள் ஏராளம். சாதனைகளும் சாமானியமானவை அல்ல.

ஆனால் அருண் செளரி போன்றவர்களின் பார்வையில் குறைகளும் குற்றங்களும் மட்டுமே தெரிகின்றன. மாவோவும், ஸ்டாலினும் படுபாதகங்களைச் செய்தவர்கள் என்கிறார் அவர். ஏராளமானவர்களை அவர்கள் கொன்று குவித்தனர் என்கிறார்.

''அதெல்லாம் சில தலைவர்களின் நடைமுறைத் தவறுகள் தானே? அதற்கு சித்தாந்தம் எப்படிப் பொறுப்பாகும்?'' என்று கேட்பதை செளரி ஒப்புக் கொள்ளவில்லை. ''சித்தாந்தமே பொய்யானது, மோசடியானது. மார்க்சியத் தத்துவம் என்பதே ஒரு நோய். அதனால்தான் நடைமுறையும் தோல்வி கண்டது'' என்பது அவரது வாதம்.

மனிதனை மனிதன் பிழிந்து (சுரண்டி) அதன் மூலம் குவிப்பதே தனியாரின் செல்வம். இதைத்தான் மார்க்ஸ் நிரூபித்தார். இந்தச் சுரண்டல் முறை இனி நீடிக்க வேண்டிய வரலாற்று நிர்பந்தம் ஏதுமில்லை. இது காலாவதியாகிவிட்ட உற்பத்தி முறை, இதை மாற்றி அமைப்பதே நீதி, இதுவே அறிவுபூர்வமானது. இதையெல்லாம் மார்க்ஸ் விளக்கினார்.

இந்த விளக்கமும் விமர்சனமும் மார்க்சின் 'மூலதனம்' என்ற படைப்பு மூலம் உலகுக்குத் தரப்பட்டுள்ளது. இதைத் தவறு என்று நிருபித்தவர்கள் யாருமில்லை. எத்தனையோ அறிவாளிகள் முயன்று பார்த்தும், தனியுடைமை - லாப நோக்கு மூலம் உலக மக்கள் அனைவரும் நலம் பெற முடியும் என்று நிறுவியவர்கள் யாருமில்லை.

சுதந்திரச் சந்தையின் மூலம் வறுமை விரட்டப்படப் போவதில்லை; வேலையில்லாக் கொடுமை தீரப் போவதில்லை, அறியாமை அகலப் போவதில்லை.

இவ்வுண்மை உலகப் பொருளாதார அறிஞர்கள் எல்லோரும் அறிந்ததே. ஆனால், மக்களிடம் இதை எடுத்துச் சொல்ல இந்த அறிவாளிகள் முன்வருவதில்லை. இவர்களின் அறிவினால் ஆகுவதுண்டோ, பிறிதின் நோய் தன் நோய் போல் உணராவிட்டால்? இது வள்ளுவர் எழுப்பும் கேள்வி.

நவீன விஞ்ஞான வளர்ச்சி நம்ப முடியாத வேகத்துடன் நிகழ்ந்து வருகிறது. அணுவைத்துளைத்து அதற்குள் ஏழுகடல்களைப் புகுத்துவது கூட 21 - ம் நூற்றாண்டில் சாத்தியம் என்று பெருமை பேசுகிறார்கள், பல அறிவு ஜீவிகள், ஒரு மனிதனை அச்சாக நகலெடுத்தாற் போல் ஆயிரம் மனிதர்களை வார்த்தெடுக்கும் வல்லமை எய்தி விட்டதாக மார்தட்டுகிறார்கள் இவர்கள்.

ஆனால், கேவலம் ஒரு கொசுவை ஒழிக்க முடியவில்லை. முடியும், முயன்றால் நிச்சயம் முடியும். ஆனால் மனமில்லை. ஏனென்றால் அதில் லாபமில்லை.

எல்லாவற்றையும் விடக் கொடுமை என்னவெனில் உலகில் வறுமை நீடிப்பதுதான். முன்பு வறுமையை அடியோடு விரட்ட மனித இனத்துக்கு ஆற்றல் இல்லாதிருந்தது. இன்று விஞ்ஞான வளர்ச்சி மூலம் அது மனிதனால் சாதிக்கக் கூடியதாக மாறிவிட்டது.

அப்படியானால் வறுமை ஏன் நீடிக்கிறது? பெருவுடைமையாளர்களுக்கு அக்கறையில்லை. அறிவுஜீவிகளோ ஏதேதோ ஆராய்ச்சிகளில் மூழ்கியிருக்கிறார்கள். நுகர்வுக் கலாசாரத்தில் புதிய பசிகளை செயற்கையாக உருவாக்கி புதிய புதிய நுகர்பொருள்கள் தீனியாகத் தரப்படுகின்றன. இதில் கம்பெனிகளுக்கு லாபம், அறிவுஜீவிகளுக்கும் ஆதாயம்.

அனைவர் கவனமும் அவரவர் தொழில் வாழ்வில் (Career) முன்னேற்றத்தில் மட்டுமே பதிந்து கிடக்கிறது. இன்னொருபுறம் பசி, பட்டினி, நீடிக்கிறது. பல கோடி மக்கள் படும் பாட்டை பத்திரிகைகளும் தொலை தொடர்புச் சாதனங்களும் போதிய அளவு பிரதிபலிக்கவில்லை. குண்டு வெடிக்கும் போது மட்டுமே அது செய்தியாகிறது. பச்சைக் குழந்தைகள் தெருவோரத்தில் பட்டினி கிடந்தால் அதில் புதுமை இல்லை. எல்லோரும் புதுமை ஒன்றையே தேடுகிறார்கள். புதிய கார்; பிறகு அதைவிடப் புதுமையான இன்னொரு கார்; அதையும் விரைவில் விற்றுவிட்டு அதி நவீனமான அடுத்த கார், எல்லாப் பொருள்களிலும் இதே அணுகுமுறைகள்தான். அனுபவிக்கும் வெறியில் அலைகிறார்கள்.

இந்தத் திசையில் உலகம் செல்வது தான் நீதி என்று செளரி போன்றோர் நினைக்கின்றார்களா? ஆற்றல் இருந்தும் வறுமையை மாற்ற மறுக்கும் சமூக அமைப்பு சரியானதா?

மார்க்ஸ் இதற்குத் தெளிவாக பதிலளித்துவிட்டார். மற்ற அறிவு ஜீவிகள் என் தடுமாற வேண்டும்?

பெர்னார்ட் ஷாவும், ஐன்ஸ்டீனும் கம்யூனிஸ்ட்கள் அல்லர். ஆனாலும் அவர்கள் லாப வெறிக்கு எதிராகவும் சோசலிசத்துக்கு ஆதரவாகவும் குரல் கொடுத்த அறிஞர்கள்.

மார்க்ஸ் முதல் மாவோ வரை யாரையுமே செளரிக்குப் பிடிக்காவிட்டாலும் பரவாயில்லை. பெர்னார்ட் ஷாவின் மென்முறை சோசலிசத்தை (Fabian Socialism) ஏற்கலாமே? அதற்கும் அவர் தயாராக இல்லாததற்குக் காரணம் என்ன?

கடந்த காலத்தில் ரஷியாவிலும், சீனாவிலும் கொல்லப்பட்டவர்களின் பிணங்கள் எத்தனை என்று எண்ணிக் கொண்டிருக்கிறார் அவர், அத்தகைய ஆய்வுகள் கண்டிக்கத்தக்கவை அல்ல. சமூக நீதியின் பெயரால் கொடுமை இழைக்கப்பட்டிருந்தாலும் அது விமரிசனம் செய்யப்பட வேண்டியதுதான்.

ஆனால் சகலவல்லமையும் படைத்த மேல்தட்டினர் இன்னும் பட்டினியை அனுமதிப்பது ஏன்? ஆபிரிக்கக் குழந்தைகளின் பஞ்சடைந்த பெரியகண்களில் பெரிய பெரிய ஈக்கள் இன்றும் அப்பிக் கொண்டு கிடப்பது ஏன்? மூன்றாம் உலகச் சேரிகளில் அப்படி அவலமாகச் சாகும் குழந்தைப் பிணங்கள் எத்தனை என்ற அருண் செளரி எண்ணிப் பார்த்துச் சொல்வாரா?

ஸ்டாலினோ வேறு எவரோ ஒரு மனிதன் செய்திருந்தால் தான் குற்றமாகுமா? ஒரு சமூக அமைப்பு முறையே இத்தனை சாவுகளுக்கு இன்னும் காரணமாக இருந்து வருகிறதே? இதை எந்தப் பொதுவுடைமைத் தத்துவத்தின் தலையிலும் ஏற்றி வைக்க முடியாதே?

இந்தியாவில் ஏழை மக்கள் நலம் பெற வேண்டுமானால் அவர்கள் ஒன்றுபட்ட சக்தியாக மாற வேண்டும். அப்படி ஒன்றுபடவிடாமல் தடுப்பது சாதிய மனப்பான்மை. இந்தச் சாதிப் பிரிவினைக்குக் காரணமாக இருக்கும் தத்துவம் இன்று ''இந்துத்தத்துவம்'' என்று பெயர் சூட்டப் பெற்றுள்ளது. இதன் பெயரால் மதவெறி வளர்க்கப்படுகிறது. இந்திய மரபில் ஆரோக்கியமானது எது? பிற்போக்கானது எது? என்ற ஆராய்ச்சி ஏதும் செய்யப்படலாகாது என்பது இந்துத்துவவாதிகளின் நிலைப்பாடு.

இதே அருண் செளரி எழுதுகிறார்:-

''முற்போக்கு வாதிகள்..... நமது மரபை வரலாற்றை, மதத்தைக் குறை கூறுகின்றனர்'' (தினமணி 11.11.97). இது ஒரு படிப்பாளியின் குரல் மட்டுமல்ல, பாரதிய ஜனதா கட்சியின் குரல்.

இந்திய மரபிலும் வரலாற்றிலும், இந்து மதம் என்று சொல்லப்படுவதிலும், கண்டித்து ஒதுக்கப்பட வேண்டியவை பல உள்ளன. ஒன்று ஆரோக்கியமற்றதாயின் அதைப் ''புனிதம்'' என்று போற்றிக் கொண்டிராமல் அகற்றியே தீர வேண்டும். அதைக் கண்டுபிடிக்க அறிவுபூர்வமான ஆய்வும் விவாதமும் அவசியமாகும்.

''கம்யூனிஸ்ட்டுகளை நம்பாதீர்கள். அவர்களுக்குச் சமநீதி என்ற சித்தாந்த நோய் பீடித்திருக்கிறது. அவர்கள் இந்திய சனாதன சாதி ஆதிக்கம் பற்றி என்ன சொன்னாலும் கேட்காதீர்கள்'' என்று அருண் செளரி கூறுகிறார்.

அம்பேத்கரும், பெரியாரும் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் அல்ல. அவர்கள்தான் இந்திய சாதி ஆதிக்க முறை பற்றியும் சாதிய தத்துவம் பற்றியும் விளக்கி நீதிக்காகப் போர் தொடுத்த முன்னோடிகள். இந்தியாவில் ஜனநாயகமும், சோசலிசமும் தழைக்க வேண்டுமானால் சாதி முறை ஒழிக்கப்பட வேண்டும் என்று கற்றுத் தந்த ஆசான்கள் அவர்கள்.

கம்யூனிசத்தை வெறுக்கும் அருண் செளரி அவர்களை ஏற்கத் தயாரா? '' இல்லை, இல்லை'' என்று அவரை முழங்கியுள்ளார். அம்பேத்கார் ஒரு பொய்க் கடவுளாம். போலித் தலைவராம். அப்படியானால் அடிப்படைக் கண்ணோட்டத்தில் அம்பேத்கருடன் ஒத்து நிற்பவரான பெரியாரும் சரியில்லை என்பது செளரியின் நிலைப்பாடு.

சோசலிசம் தப்பு. அப்பேத்காரும் பெரியாரும் தப்பு என்றால், சமூக நீதி கோரும் தத்துவங்கள் வேறு எது, தலைவர்கள் வேறு யார்?

இந்துத்துவம் மட்டுமே களத்தில் மிஞ்சுகிறது. அதைத் தான் அருண் செளரி விரும்புகிறார். சோசலிச சிந்தனையாளர்களும் இந்துத்துவ - சாதிய எதிர்ப்பாளர்களும், ஒன்று கலப்பதைக் கண்டு அஞ்சுகின்றார். அதைத் தடுக்க தம் அறிவைப் பயன்படுத்துகிறார்.

# ஒரு ஏமாற்று அம்பலமாகிறது!

சோஷலிசம் பொய்த்துப் போன ஒன்று. முதலாளித்துவம் தான் என்றென்றும் சிரஞ்சீவியாக இருக்கப் போகிறது என்பது அமெரிக்காவின் தலைமையிலான பிரச்சாரம். மூன்றாம் உலக நாடுகள் சுயசார்பில் சொந்த வளங்களை அபிவிருத்தி செய்து தேசிய பொருளாதாரங்களைக் கட்டி எழுப்புதல் என்பதை மூழ்கடிப்பது அமெரிக்க மேற்கு நாட்டு முதலாளித்துவங்களின் பிரதான இலக்கு. தாராள சந்தைப் பொருளாதாரமே இன்றைய உலகின் ஒரே ஒரு அபிவிருத்திப் பாதை எனக்கூறி அமெரிக்க ஐரோப்பிய ஜப்பானிய முதலாளித்துவ ஏகாதிபத்திய மையங்கள் குரல் எழுப்பி வந்தன. இன்றும் அதற்காக தீவிர செயற்பாட்டைக் கொண்டிருக்கின்றன.

இதனை ஆசியாவில் ஒரு ஏமாற்றுக் கண்காட்சியாகக் காட்டிக் கொள்ள தமது கைப்பொம்மை அரசாங்கங்களை தேர்ந்தெடுத்தன. தென்கொரியா, தாய்வான், கொங்கொங், சிங்கப்பூர் ஆகியனவற்றுக்கு கோடிக்கணக்கில் அள்ளிக் கொடுத்து அவற்றின் பொருளாதார வளர்ச்சிப் புள்ளி விபரங்களைக் காட்டி உலகை அதிசயிக்க வைத்தனர். ஆசியாவில் நமது நாட்டுப் பொருளாதார நிபுணர்கள் சிலர் முதலாளித்துவத்தின் உள் இயல்பு அறியாது வாய் பிளந்து நின்றனர். கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு என்பது போல் ஒரு இரண்டு தசாப்தத்திற்குள் இந்த நான்கு பொருளாதாரப் புலிகள் என அழைக்கப்பட்ட நாடுகளின் பொருளாதாரங்கள் வேருடன் சரிந்துள்ள அபாயத்தைத் தேடிக் கொண்டன.

இதில் கொங்கொங் தாய் நாட்டுடன் இணைந்த சூழலால் அதன் பகிரங்க சரிவு சிறு அளவு பாதுகாக்கப்பட்டுள்ளது. தாய்வான் சிங்கப்பூர் தமது பொருளாதாரத்தில் மீளபுனரமைப்பு செய்ய வேண்டியதன் அவசியத்தை சுட்டிக் காட்டி மேலும் தமது எசமானர்களிடம் உதவி கோரி நிற்கின்றன. அதேவேளை குறிப்பாக தென்கொரிய நிலைமை அதளபாதாளத்திற்குச் சென்றுள்ளது. இதனை அவசர அவசரமாகச் சரிசெய்து தூக்கி நிறுத்தி அதனை மீட்க சர்வதேச நாணய நிதியம் 5700 கோடி டாலர்களை வழங்கி உள்ளது. நாணய நிதியத்தின் வரலாற்றில் இதுவே ஆகக் கூடிய உதவி எனக் கூறப்படுகிறது. இத்துடன் உலக வங்கி ஆசிய அபிவிருத்தி வங்கி முறையே 1000 கோடி டாலரும், 400 கோடி டாலரும் இதர நாடுகள் 2200 கோடி டாலர்களையும் வழங்கி உள்ளன. இதில் அமெரிக்கா 500 கோடியையும் ஜப்பான் 1000 கோடியையும் வழங்கி உள்ளன.

அமெரிக்க திறைசேரிச் செயலாளர் ரொபேட் ரொபின் இதுபற்றிக் கூறுகையில் இவ் உதவியானது எமது தேசிய நலனுக்கும் பாதுகாப்பிற்கும் அடிப்படையான ஒன்று என்பதுடன் கொரியாவின் சந்தைப் பொருளாதாரத்தைப் பாதுகாக்க உதவி செய்வதும் ஆகும் எனக் கூறி உள்ளார்.

இதுதான் தென் கொரிய தாராள - சந்தைப் பொருளாதாரத்தின் அபிவிருத்தி. இதைத் தான் நமது நாட்டின் தலைவர்களும் பின்பற்றும் படி நமக்கு ஆலோசனை வழங்குகின்றனர். உலக நிதி நிறுவனங்கள் இவ்வாறு தென் கொரியாவிற்கு அள்ளிக் கொடுத்துவிட்டு சும்மா இருக்க மாட்டாது. பொருளாதார சீர்திருத்தம் என்ற பெயரில் வரி உயர்வுகளும், பொதுச் சேவைக்குறைப்புகளும், சம்பள உயர்வு மறுப்புகளும் தாராளமாக நிகழ்த்தப்படும். இது தென்கொரியத் தொழிலாளர்களின் விவசாயிகளின் மாணவர்களின் மற்றும் உழைக்கும் மக்களின் புயல் போன்ற எதிர்ப்புகளை உருவாக்கவே செய்யும். ஏற்கனவே அங்கு போராட்டங்கள் மேற்கிளம்புவது எவ்வகையிலும் தவிர்க்க இயலாததாகின்றது. அமெரிக்காவின் ஏமாற்று தென்கொரியா மூலம் ஆசியாவில் அம்பலமாகி நிற்கிறது.

# வடக்கே தமிழரசு தெற்கே சமஷ்டி



## தந்தையும் மைந்தரும் - 3

தமிழரசுக் கட்சியின் அரசியல், 1949 முதல் 1955 வரை மந்தகதியிலேயே இருந்தது. 1952ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில், வன்னியசிங்கம், நீங்கலாக யாழ் குடாநாட்டின் சகல தமிழரசு வேட்பாளர்களும் மண் கவ்வினர். வன்னியசிங்கம் கோப்பாய்த் தொகுதியில் சிறியளவு பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்றார். கிழக்கில் திருகோணமலைத் தொகுதியில் ந.இ.இராஜவரோதயம் பெற்ற வெற்றியும் அங்கு கம்யூனிஸ்ட் வேட்பாளர் ஒருவர் போட்டியிட்டதால் வசதியானதென வேண்டும். ஏனெனில் அங்கு சிங்கள வாக்காளர்கள் குறிப்பிடத்தக்க அளவில் இருந்தனர். அவர்களிற் கணிசமானோர் கம்யூனிஸ்ட் வேட்பாளருக்கே வாக்களித்தனர். திருகோணமலைத் தமிழ் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் 1948 ல் யூ.என்.பியில் சேர்ந்தது காரணமாகவே தமிழரசுக்கட்சி அங்கு போட்டியிட வசதி ஏற்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாணத்தில் தமிழ்க் காங்கிரஸ் திருகோணமலை தவிர்ந்த எத்தொகுதியிலும் காலூன்றவில்லை. எனவே தமிழரசுக் கட்சியும் 1952ல் அங்கு போட்டியிட்டு வெல்ல இடமிருந்தது. மற்றப்படி, கொழும்பில் ஒரு காலும் யாழ்ப்பாணத்தில் ஒரு காலுமாக நின்ற யாழ்ப்பாண வேளாள மேட்டுக்குடிகளது தலைமை, வட மாகாணத்துக்கு வெளியே, கொழும்புச் சீமான்கள் பற்றிக் காட்டிய கவனத்தை கிழக்கின் தமிழர்கள் பற்றி காட்டவில்லை. மலையகத்தமிழர் பற்றியும் முஸ்லிம்கள் பற்றியும் அவர்களது அக்கறை அதனிலும் குறைவாகவே இருந்தது.

வடக்கின் சாதிய சமுதாயத்தைத் தளமாகக் கொண்டு வளர்ந்த 'தமிழ்த் தேசிய' அரசியல் தலைமைகளிடமிருந்து ஒரு பரந்துபட்ட, மக்கள் நலன்சார்ந்த பார்வையை நாம் எதிர்பார்க்க நியாயமில்லை.

இந்த வகையில் தமிழரசுக் கட்சித் தலைமை தமிழ்க் காங்கிரஸை விட முற்போக்கான ஒரு தோற்றத்தைக் காட்டியது. 1952ம் ஆண்டு காங்கேசன்துறைத் தொகுதியில் செல்வநாயகத்துக்கு எதிராக தமிழ் காங்கிரஸால் அவர் ஒரு கிறிஸ்துவர் என்ற வாதமும் பயன்படுத்தப்பட்டது. இதே கிறிஸ்துவர் தான் 1947ல் தமிழ்க் காங்கிரஸ் சார்பாக அதே தொகுதியில் வேட்பாளராக நின்று வெற்றியீட்டியவர் என்பதும் நாம் நினைவிலிருத்த வேண்டியது.

தமிழ்த் தேசியத் தலைமைகளைப் பொறுத்த வரை, மலையகத் தமிழ் மக்களும் முஸ்லிம்களும் அவர்களது 'தமிழ்த் தேர்தல் தொகுதியில்' தேவைகளின் தேவைகட்கேற்பவே முக்கியம் பெற்றனர். தனக்குள்ளேயே சாதிய, பிற தேசிய அடிப்படையிலான அதிகார அடுக்குகளையும் பிளவுகளையும் கொண்ட ஒரு சமூக அமைப்பைச் சார்ந்து உருவான ஒரு தலைமையால் மொழியின் அடிப்படையில் சகல தமிழ்ப்பேசும் சமூகங்களை வழி நடத்த முடியுமா என்ற கேள்வி அன்று முதல் இன்று வரை நம்முன் நிற்கிறது.


தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரசுக்கு ஒரு பாராளுமன்ற மாற்றுக் கட்சியாக உருவானதேயொழிய, வெகுசன அரசியல் இயக்கமாக உருவாகவில்லை. ஒடுக்கப்பட்ட வெகுசனங்களது தேவைகளை வைத்துப் போராடும் ஒரு கட்சியால் அத் தேவைகளைத் தேசிய இன வரையறைகட்குட் குறுக்கிக் கொள்ள இயலாது. அன்றைய அரசியல் நிலைமைகளில், மேட்டுக்குடி அரசியலுக்கு அது அவசியமும் இல்லை. சாதிமான், கனவான், கல்விமான் போன்றவையே தகுதிகளாக இருந்து வந்த அரசியற் கட்சிகளின் போராட்டங்களும், பிரமுகர்களது பேரம் பேசுதலின் தளத்திலேயே நிகழ்ந்தன. 1952 ல் தேர்தலில் தோல்வி பெற்ற செல்வநாயகமும், ஈ.எம்.வி.நாகநாதனும் வெற்றி பெற்றவர்களான சு.நடேசபிள்ளைக்கும், ஜி.ஜி. பொன்னம்பலத்துக்கும் எதிராகத் தேர்தல் மனு சமர்ப்பித்து வழக்காடித் தோற்றனர். இந்த விதமாகக் கோடேறி வழக்குரைத்து மகாராணியாரின் சந்நிதிக்குப் பெட்டிசமும் அனுப்புகிற அரசியல் பழக்கம் 1960கள் வரையும் தொடர்ந்தது.

1955களில் சிங்கள மொழியை அரச கரும மொழியாக்குவது என்ற சலசலப்புக் கேட்கும் வரை, தமிழரசுக் கட்சியின் வளர்ச்சி மந்தமாகவே இருந்தது. ஆயினும் தமிழரசுக் கட்சிக்குள் தமிழ்க் காங்கிரஸை விடச் சிறிது முற்போக்கான ஒரு முனைப்புக்கு இடமிருந்ததை 1953 ஹர்த்தால் உணர்த்தியது. யாழ்ப்பாணத்தில் கோப்பாய் பா.உ. வன்னியசிங்கம் முன்நின்று ஹர்த்தாலுக்கு வழங்கிய ஆதரவு முக்கியமானது. இதன் தொடர்ச்சியாக இடதுசாரி, முற்போக்கு அரசியற் போக்குகளுடன் தமிழரசுக் கட்சி இணைந்து செயற்படும் என்ற எதிர்பார்ப்புக்கு அதன் கொழும்புப் பிரமுகர்கள் ஆயத்தமாக இருக்க நியாயமில்லை. அதைவிட முக்கியமாக, தென்னிலங்கையின் தேசிய முதலாளித்துவக் கட்சியான ஸ்ரீ.ல.சு.கட்சிக்கு யூ.என்.பிக்கு எதிரான ஒரு முற்போக்கான அரசியல் முகம் தேவைப்பட்ட அளவுக்குத் தமிழரசுக் கட்சிக்கு வடக்கில் தேவையில்லாதபடி, அங்கு சிங்களம் அரச கருமமொழியாவதை மட்டுமே வைத்தே அரசியல் நடத்த வசதி ஏற்பட்டுவிட்டது.

வர்க்க ஒடுக்குமுறை, சாதியம் போன்ற பிரச்சனைகளின் அடிப்படையில் இடதுசாரிகட்கு வடக்கில் ஒரு தளம் இருந்தது. அந்தப் பிரச்சனைகளில் தலையிட்டுத் தமிழரசுக்கட்சி பெறக்கூடிய உடனடியான லாபத்தை விடச், சாதிய அரசியலின் பிரயோகத்தால் தமிழ்க் காங்கிரஸ் அவர்களிடமிருந்து பறிக்கக் கூடியது அதிகம். எனவே, தமிழ் மொழிக்கு ஆபத்து, தமிழினத்துக்கு ஆபத்து என்றவிதமான பிரசாரத்தால் தமிழ்க் வசமிருந்த காங்கிரஸின் தமிழ்த் தேசிய இனத் தலைமைத்துவத்தைப் பறிக்க தமிழரசுத்தலைமை முற்பட்டது. மலையக மக்களுக்குத் துரோகமிழைத்து நாட்டின் சிறுபான்மை இனத்தவரைப் பலவீனப்படுத்திய ஜீ.ஜி. பொன்னம்பலம், சிங்களம் மட்டுமே சட்டத்தின் வரவை நிறுத்த இயலாத ஒரு அரசியல் அனாதையாகவும், அவருக்கு - எதிராகத், தீர்க்கதரிசயான செல்வநாயகமும் என்ற விதமாகவே தமிழ்க் காங்கிரஸ் - தமிழரசுக் கட்சி மோதல் சித்தரிக்கப்பட்டது. 1955 ல் சேர் ஜோண் கொத்தலாவலையை வடக்கே அழைத்துச் சென்று தமிழும் சிங்களமும் நாட்டின் அரச கரும மொழிகளாகும் என்று சொல்ல வைத்து அந்த மேதாவித்தனத்தால் தனது அரசியல் தலைமையை நிலைநிறுத்த முயன்ற பொன்னம்பலத்தின் அந்த அரசியல் மேதாவித்தனமான செயலே 'அவரது பெரிய அடிச்சறுக்களாகி 1956 ல் தமிழ்க்காங்கிரஸின் தோல்விக்குக் காரணமாகிவிட்டது.

தென்னிலங்கையில் தமிழுக்கும் சமவுரிமை கோரி சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் உறுதியான நிலைப்பாட்டை எடுத்த போதும் தேர்தலின் யூ.என்.பியை முறியடிக்கும் தேவைகருதி எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவின் தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணியுடன் சில போட்டித் தவிர்ப்பு உடன்பாடுகளையும் ஏற்படுத்தின. தென்னிலங்கை அரசியலின் சமூக, பொருளாதார, சர்வதேச அரசியற் பரிமாணங்களையெல்லாம் புறக்கணித்து தமிழ் மொழி, தமிழ் இனம் இரண்டையுமே அழிப்பதற்குச் சிங்கள இனமே அணிதிரண்டிருப்பதாகக் காட்டிய தமிழரசுக்கட்சி அதை வைத்தே மேலும் இருபது ஆண்டுகளாகத் தன் அரசியற் பிழைப்பை நடத்தியது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி என்ற பேர் 1956 ம் ஆண்டுத் தேர்தலில் அதற்கு மிகவும் வசதியான ஒன்றாக இருந்தது. ஆயினும், இந்தப் பேரைப் பாவிப்பது பின்னர் தென்னிலங்கையில் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும் என்பது பற்றி தமிழரசுக்கட்சி தொடக்கப்பட்ட காலத்தில் ஆழமாகச் சிந்தித்திருக்க இடமில்லை. அரசு என்ற சொல் தமிழருக்கான மாநில அரசு, சுயாட்சி என்ற பொருளிலேயே பயன்படுத்தப்பட்டாலும் அதைப் பிரிவினை என்று விஷமத்தனமாக வியாக்கியானம் செய்து சமஷ்டி என்றால் பிரிவினை என்றே கருத்து என்று சிங்கள மக்களிடம் இனவாதிகள் பிரசாரம் செய்ய அந்தப் பேர் வசதியாகி விட்டது. இது முஸ்லிம்கள் மத்தியில் ஏற்படுத்தக் கூடிய தாக்கம் பற்றியும் தீர்க்கதரிசியாகக் கருதப்பட்ட தந்தையோ அவர் வழி நடந்த மைந்தர்களோ அதிகம் சிந்தித்ததாகத் தெரியவில்லை. ஆயினும் தெற்கில் ஆங்கில ஏடுகளில் தன்னைச் சமஷ்டிக் கட்சி என்றே தமிழரசுக் கட்சி அறிமுகப்படுத்தி வந்தது. தென்னிலங்கையைப் பொறுத்த வரை இந்தக் 'கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை' தீர்க்கதரிசனம் எதிர்பார்த்ததற்கு எதிர்மாறான விளைவையே ஏற்படுத்தியதை 1956க்குப் பின் நடந்தவை நிரூபித்தன.



# யார் உணவைக் குறைக்க வேண்டும்?

## பாராளுமன்றத்தில் ஒருநாள் உணவுச் செலவு 4 லட்சம் ரூபா

அரிசி, மா, சீனி போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. மரக்கறி, மீன் வகைகள் கூடுதல் விலைகளுக்கே வாங்க வேண்டியுள்ளது. ஒரு தேங்காயின் விலை பன்னிரண்டு ரூபாய் வரை விற்கிறது. சம்பல் செய்து சாப்பிடுவதே கஷ்டமாகி வருகிறது. எனவே உயர்ந்து செல்லும் விலை உயர்வுகளை கட்டுப்படுத்துங்கள் என அரசாங்கத்தை மக்கள் கேட்கிறார்கள். அத்துடன் உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ற சம்பள உயர்வை வழங்குங்கள் என்று பல தரத்திலும் வற்புறுத்துகிறார்கள். இதற்கு அரசாங்கம் உரிய பதில் எதுவும் கொடுப்பதாக இல்லை. வரவு செலவுத்திட்டத்தில் விலை உயர்வுகள் எதனையும் கொண்டு வரவில்லை என்றே கூறி வருகிறது. அத்துடன் வாழ்க்கைச் செலவு உயர்ந்தால் உங்கள் இடுப்புப் பட்டியை இறுக்கிக் கொள்ளுங்கள் என்று ஒவ்வொரு அரசாங்கமும் கூறி வருவது சாதாரண நடைமுறையாகும். பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் அப்படி நேரடியாக இதுவரை எதுவும் கூறவில்லை. ஆனால் இந்த அரசாங்கத்தின் உணவு வர்த்தகத்துறை அமைச்சர் கிங்கிலி விக்கிரமரத்தின இடுப்புப் பட்டியை இறுக்கிக் கொள்ளும் படி மறைமுகமாகக் கூறியுள்ளார். அவர் பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் இலங்கையர்களாகிய நாம் அதிக உணவை உண்பதாகவும் அதில் முப்பது வீதத்தைக் குறைத்தால் வருடத்தில் 5200 கோடி ரூபா மீதப்படுத்திக் கொள்ளலாம் எனவும் கூறி உள்ளார். அத்துடன் வருடாந்தம் ஒருவர் 102 கி.அரிசி, 44 கி.மாவு, 32 கி.சீனி சாப்பிடுவதாகவும் கணக்கொன்றையும் காட்டி உள்ளார். இந்தக் கணக்கை எத்தகைய பிரிவினர்களைக் கொண்டு அமைச்சர் கணக்கிட்டாரோ தெரியவில்லை. இன்று ஒருவேளைக்கு மட்டும் போசாக்குள்ள உணவைப் பெற முடியாத சாதாரண மக்கள் இலங்கையின் சனத்தொகையில் நாற்பது வீதம் என்று கூறப்படுகிறது. வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்களுக்கே உணவு முத்திரை சமுர்த்தி திட்டம் போன்றவற்றின் மூலம் உதவப்படுகிறது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பல லட்சம் வடக்கு கிழக்கு மக்கள் நிவாரணத்தில் வாழ்க்கையை ஏனோதானோ என நடாத்தி வருகிறார்கள். மலையகத்தில் தோட்டத் தொழிலாளர்கள் ஒருநாள் வேலை செய்தால் 83 ரூபாவை மட்டுமே சம்பளமாகப் பெற்று அதனைக் கொண்டே தமது குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டியுள்ளது. மாவின் விலை உயர்வு அவர்களது குறைந்த போசாக்குணவான ரொட்டியைக் கூடத் தட்டிப் பறித்துள்ளது. நகர்ப்புற தொழிலாளர்களும் கிராமப்புற விவசாயிகளும் தேவைக்கு அதிகமாகச் சாப்பிடுகிறார்கள் என்ற கூற்று முற்றிலும் கற்பனையானதாகும்.

தொடர்ச்சி பக்கம் 11இல்

நன்றி - நூலகத்திட்டம்





# மாற்று இடதுசாரி அரசியலுக்கான புதிய பரீட்சார்த்தங்கள்

இடதுசாரிகளை பொத்தாம் பொதுவாக குறை கூறி ஒதுக்கும் அளவிற்கு இலங்கையின் அரசியல் வரலாற்றில் அவர்களினது பங்கு குறைவாக இருக்கவில்லை. பாராளுமன்றத்திற்கு செல்லும் போட்டியில் சில இடதுசாரி சக்திகள் வாக்கு வேட்டையைப் பிரதானப்படுத்தியதால் இடதுசாரிகளின் அரசியல் வரலாற்றில் பின்னடைவு ஏற்பட்டது என்னவோ உண்மைதான்.

ஆனால் இடது சாரிகளின் கடந்தகால வரலாற்றில் ஏற்பட்ட தவறுகளிலிருந்து பாடங்களைப் படித்து மெதுவாக தன்னும் ஒரு மாற்று அரசியல் அணியாக இடதுசாரி அணியை கட்டி வளர்ப்பதற்கான வேலைகள் திட்டமிட்டு முன்னெடுக்கப்படுகின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் இடதுசாரி கட்சிகளின் தலைமைகளின் இயலாமையாலும், அரசியல் தத்துவ நடைமுறை வறுமையினாலும் மாற்று அரசியல் சக்தியாக இடதுசாரி அணியொன்றை கட்டிவளர்ப்பதில் அவற்றுக்கு முதல் நிலை பாத்திரத்தை வகிக்கு முடியவில்லை.

பாராளுமன்றத்திற்கு வெளியில் இருக்கும் இடதுசாரி கட்சிகளினதும், குழுக்களினதும் தலைமை முதல் கீழ்மட்டம் வரை முன்னெடுத்த முயற்சிகளின் பலனாக நிகழ்கால இடதுசாரி அரசியலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

அவற்றில் ஒன்றுதான் 'ஐக்கிய இடதுசாரி கமிட்டி'யின் தோற்றமும் வளர்ச்சியுமாகும். யுத்தத்திற்கு எதிராக பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் அரசியல் வேலைகள் முன்னெடுக்கப்பட்டு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அவர்கள் ஏற்கக் கூடிய அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற இயக்கம் முன்னெடுக்கப்படுகின்றது. இக்கமிட்டி இடதுசாரி, முற்போக்கு ஜனநாயக கட்சிகளின் அமைப்புகளின் கூட்டணியாக இயங்குகிறது.

இதற்கு அப்பால், ஏகாதிபத்தியத்திற்கு, யுத்தத்திற்கு, குறுகிய தேசிய வாதத்திற்கு எதிராக வெகுஜன அரசியல் இயக்கத்தை கட்டி வளர்ப்பதற்காக நவம்பர் 29 இல் கொழும்பில் நடைபெற்ற தேசிய மாநாடு குறிப்பிடக் கூடியதாகும். இடதுசாரி அணியை கட்டிவளர்க்க கட்சிகளின் அமைப்புகளின் கூட்டணிகளுக்கும் அப்பால் மக்களினை அதையும் நேரடியாக பங்கெடுக்கச் செய்யும் வகையில் பரந்துபட்ட வெகுஜன இயக்கத்தை கட்டி வளர்ப்பதும் அவசியம் என்பது உணரப்பட்டு இம்மாநாடு நடத்தப்பட்டது. அதாவது அரசியல் வெகுஜன இயக்கம் இன்னொரு அரசியல் கட்சியாகவன்றி பல கட்சிகளின் அங்கத்தினர்களையும், கட்சிகளில்லாதவர்களையும் பொதுத்தேவைக் கருதி ஓரிடத்தில் இணைக்கக் கூடிய அமைப்பாக இயங்கும். அதேவேளை தனியொரு கட்சியின் வெகுஜன அமைப்பாக வன்றி பல்வேறுபட்ட இடதுசாரி, முற்போக்கு ஜனநாயக கட்சிகளினதும் வெகுஜன அணியாக, மாற்று இடதுசாரி அணியைக் கட்டி வளர்ப்பதற்கான வெகுஜனதளத்தை அமைப்பதற்கான நோக்குடன் செயற்படும்.


இலங்கையினதும் பல்வேறு வெளி நாடுகளினதும் அனுபவங்களை தொகுத்து தூர நோக்குடன் இந்த வெகுஜன அரசியல் இயக்கம் உதயமாகிறது. இது ஒரு புதிய பரீட்சார்த்தம்.

இப்பரீட்சார்த்தம் கட்சிகளினதும், கட்சிகளினது கூட்டணிகளினதும் வரையறைகளுக்கு அப்பால் மக்களை அணிதிரட்டக்கூடிய வழிமுறையாகவே கொள்ளப்படுகிறது.

அந்த அடிப்படையில் கடந்த நவம்பர் 29ஆம் திகதி கொழும்பு கொள்ளுப்பிட்டி குருதெர மண்டபத்தில் தேசிய மாநாடு நடைபெற்றது.

இம்மாநாட்டில் வடக்கு கிழக்கு உட்பட 18 மாவட்டங்களிலிருந்து பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். நீண்ட இடைவெளிகளுக்குப் பிறகு இலங்கையில் பல பாகங்களிலிருந்தும் சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகத்தை சேர்ந்தவர்களும் பல்வேறு கட்சிகள் அமைப்புகளை சேர்ந்தவர்கள் எந்தவொரு அமைப்பைச் சாராதவர்களும் ஓரிடத்தில் கூடி மாற்று அரசியல் வழிமுறை பற்றி ஆராய்ந்துள்ளனர் என்பதும் ஒரு வெகுஜன அரசியல் இயக்கத்தில் இணைந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்க நிகழ்வாகும்.

இம்மாநாட்டில் புதிய ஜனநாயக கட்சி, நவசமசமாஜக் கட்சி, மாக்சிச தொழிலாளர் போக்கு, தியேச கல்வி வட்டம், காணி விவசாய சீர்திருத்த அமைப்பு போன்ற பல இடதுசாரி அமைப்புகளின் தலைமைத் தோழர்கள் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.



# பாட்டாளி வர்க்க அரசியலையும் கட்சியையும் முதன்மைப்படுத்தியவர்

"தனிப்பட்ட வாழ்க்கையில் முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ பழக்க வழக்கங்கள் ஒழுக்கங்கள் கலாசாரம் என்பவற்றை பேணுபவர்களிடமிருந்து அல்லது அவற்றின் பாதிப்புகளுக்குட்பட்டவர்களிடமிருந்து மாக்சியத்தை - புரட்சியை கற்றுக் கொள்ள முயற்சிக்கக்கூடாது.

அவர்களிடமிருந்து வேறு எதை வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளலாம். ஆனால் மாக்சிசத்தை அல்ல.

மாக்சியத்தை பற்றி அறியாமல் கூட தொழிலாளர்களும், விவசாயிகளும், அடக்கப்பட்ட மக்களும் அதன் வழியிலேயே வாழ்க்கையை நடத்துகிறார்கள். அவர்கள் புரட்சியை விரும்புகிறார்கள். ஒரு புத்திஜீவி புரட்சிவாதியாக இருக்க வேண்டுமானால் அவர் எப்போதும் தொழிலாளர்களாலும், விவசாயிகளாலும் அடக்கப்பட்ட மக்களாலும் சூழப்பட்டவராக இருக்க வேண்டும்.

புரட்சிக்கு புரட்சிகர கட்சி அல்லது புரட்சிகர கட்சிகள் மிகவும் அவசியமானவை. புரட்சிகர கட்சியை பலப்படுத்த, அதன் புரட்சிகர நோக்கத்தை நிறைவேற்ற கால சூழ்நிலைக்கேற்ப பலவிதமான வெகுஜன அணிகள் அவசியம்.

புரட்சியில் வெற்றி பெறவும், புரட்சிக்கான இடைக்கட்டங்களை வெற்றிகரமாக கடக்கவும், புரட்சிக்காக பரந்துபட்ட மக்களை அணிதிரட்டவும் காலத்துக்கு காலம் சரியாக இனம் காணப்படும் நேச சக்திகளை அவற்றின் வர்க்க நிலைப்பாடு பற்றிய சரியான தெளிவுடனும் நிபந்தனைகளுடனும் ஐக்கியப்படுவது அவசியமாகும்.

இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளில் சோஸலிசப் புரட்சியை வெற்றி கொள்ள முன்பு ஜனநாயகப்

தொடர்ச்சி பக்கம் 11இல்

# இங்கேருங்க இத கொஞ்சம் கேளுங்க

அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் மலையக மக்களிடம் தொடர்ந்தும் பிரஜாவுரிமை சான்றிதழ் கோருவதை அனுமதிக்க முடியாது. சத்திய கடதாசி சமர்ப்பிக்கப்பட்டால் மறுப்பின்றி அதனை ஏற்க வேண்டும். அது பொய்யான தகவலைக் கொண்டது என்று நிரூபிக்கப்பட்டால் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

(தொண்டமான் தினக்குரல் 29/9/97)

மலையக மக்கள் அரசியல் ரீதியாக ஒதுக்கி வைக்கப்பட்டதால் தான் கல்வித்துறையில் மட்டுமல்ல சகல துறைகளிலும் பின்தங்கி விட்டனர்.

(முத்து சிவலிங்கம் தினக்குரல் 29/9/97 )

தொழிலாளர்களின் பிரச்சனைகளைக் கையாண்டு தீர்த்து வைக்க தொழிற்சங்கப் பிரதிநிதிகளை வெளிநாடுகளில் சென்று பயிற்சி பெறவைத்தோம். அவர்கள் நன்றி மறந்து காங்கிரஸை விட்டு வெளியேற்றி எம்க்கு எதிராக செயற்பட்டனர்.

(தொண்டமான் தினக்குரல் 24.9.97)

தோட்டத் தொழிலாளரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு சில தொழிற்சங்கத் தலைவர்கள் விரும்புவதில்லை தோட்டத் தொழிலாளியின் பிள்ளையும் தந்தையைப் போலவே தொழிலாளியாகவே இருக்க வேண்டும் என அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

(இரட்ணசிறி விக்கிரமநாயக்க தினக்குரல் 4.9.97)

தொழிற்சங்க வேறுபாடுகளுக்கு அப்பால் நடாத்தப்படும் வேலை நிறுத்தப் போராட்டங்களே சரியான வழிமுறையாகும்.

(சட்டத்தரணி இளையதம்பி தம்பையா, புதிய ஜனநாயக கட்சியின் தேசிய அமைப்பாளர் தினக்குரல் 1.9.97 )

மலையக தேயிலைத் தோட்டங்களிலிருந்து 500 ஏக்கர் காணி, கேட்டுள்ளோம் பொதுமக்களுக்கு காணி கொடுப்பதற்கு இடம் இல்லை அப்படி காணி பிரித்துக் கொடுப்பது என்றால் தேயிலை தோட்டங்களில் தான் காணி பிரித்துக் கொடுக்கலாம்.

(திஸாநாயக்க வீரகேசரி 30.9.97)

மலையக மக்களின் பெருத்த எதிர்பார்ப்புக்கு ஏற்ப செயற்பட முடியாத நிலைமையை நாம் ஏற்றுக் கொள்கிறோம். வாய்மூடி மௌனிகளாக எம்மக்களை எமது தலைவர்கள் உருவாக்கி வைத்துள்ளார்கள். மக்கள் விழித்துக் கொண்டு விட்டதை நாம் பார்க்க முடிகிறது. மக்களை எந்நாளும் ஏமாற்றக் கொண்டிருக்க முடியாது என்பதை நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.

(ம.ம.மு.தலைவர் பெ.சந்திரசேகரன் வீரகேசரி 16.08.97)

சுயதொழில் வேலைத் திட்டங்களை மலையக இளைஞர்கள் செவ்வனே செய்து கொள்ளத் தக்கவாறு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு பல்வேறு திட்டங்களை அமுல் செய்து வருகின்றது. தோட்ட மக்கள் வீடுகள் சொந்தமாக்கப்பட்டுள்ளன வீட்டின் முன் பின் உள்ள நிலம் சொந்தமாக்கப்பட்டுள்ளன. தங்கள் வீட்டை மாடி வீடாக்கவும் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

(எஸ்.சதாசிவம் தினகரன் 22.08.97)

இன்று யுத்தத்தில் போரிடுவது கொழும்பு கறுவாக் காட்டில் குபேரவாழ்வு வாழும் கனவான்களின் எல்லைகள் அல்ல. கிராமப்புறங்களில் வாழும் ஏழை மக்களின் எல்லைகள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

(அனுருத்த ரத்வத்த தினக்குரல் 28.08.97)


மலையக அமைப்புகள் பலவும் அரசுடன் நேச உறவு கொண்டிருந்த போதும் மலையக மக்கள் எந்த விதமான நன்மையையும் அடையவில்லை.

(பி.சந்திரசேகரன் தினக்குரல் 27.8.97)

நன்றி - நூலகத்திட்டம்



# சி.வை.தாமோதரம்பிள்ளையும் மதச்சார்பான ஒரு ஆராய்வும்




பேராசிரியர் ரத்னஜீவன் ஹூல் அமெரிக்காவிலும் இலங்கையிலும் எந்திரவியல் ஆய்விலும் அறிவிலும் உயர்ந்த ஒருவராகக் கூறப்படுபவர். அவரது ஆய்வுத் திறனை அவர் தாமோதரம்பிள்ளை மீதும் தமிழ்ச் சமூகத்தின் மீதும் பிரயோகித்து எழுதிய ஒரு கட்டுரை இரண்டு ஆண்டுகள் முன்பு லண்டன் **தமிழ் டைம்ஸ்** ஏட்டில் வந்தது. அது கடுமையான மறுப்புக்களையும் சந்தித்தது. ஆயினும், விடாப்பிடியாகத் தன் கருத்தில் குறிப்பிடத்தக்க எந்த மாற்றமுமில்லாமல், தனது பழைய கட்டுரையை ஒரு சிறு நூலாகக் கடந்த நவெம்பர் 17ம் திகதி வெளியிட்டு, இனத்துவக் கல்விக்கான சருவதேச மையத்தின் (ICES) கொழும்பு பணிமனையில் உரையாற்றினார்.

அகச்சார்பான ஆய்வு, அது எந்தப் பெரிய மேதையின் ஆய்வானாலும் முக்கியமான உண்மைகளை எளிதாகத் தவறவிடுவது இயல்பானது. எதையும் நிரூபிக்க வேண்டும் என்பதற்காக ஆய்வுகளை மேற்கொள்வோர், தாம் நிரூபிக்க முயல்வது உண்மையா இல்லையா என்று கவலைப்படுவதில்லை. அவர்களது சிரத்தையெல்லாம், தமக்கு உடன்பாடான சாட்சிகளை, அவர்களது தகுதி எத்தன்மையதாயினும், தேடிப் பிடிப்பதில் மட்டுமே காட்டப்படுகிறது.

சி.வை.தாமோதரம்பிள்ளை புரட்டஸ்தாந்து கிறிஸ்தவராக இருந்து சைவராக மாறியது பற்றிய தகவல் இன்று பலரும் மறந்து போன ஒன்று. இதன் விளைவாக, அவரது எழுத்தின் அடிப்படையிலேயே அவரைப் பற்றிய விவரணங்களும் மதிப்பீடுகளும் வருகின்றன. தாமோதரம்பிள்ளையின் மதமாற்றச் சூழலை அவரைச் சிறிது ஏளனஞ் செய்யுந் தொனியிலேயே விமர்சிக்கும் ஹூல், அவரது முன்னோரும் பிறரும் கிறிஸ்தவராக மதம் மாறிய சூழ்நிலையை மட்டும் அதிகம் கவனிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தாமோதரம்பிள்ளை உயர் வேளாள சாதியினரல்ல என்று கூறும் ஹூல், அவர் ஏதோ பிற்படுத்தப்பட்ட சாதியினர் என்ற மயக்கத்தைத் தோற்றுவிக்க முற்படுவதாகவே தெரிகிறது. சாதிக்குள் சாதி பார்க்கும் வேளாளர் பற்றி, ஹூல் சொல்லுமுன்பே, பலரும் அறிவோம். ஹூல் அறியாததென்னவெனில், எந்தச் சாதி அமைப்பினுள்ளும் சில சமூகப் பிரிவுகள் பொருளாதார வளர்ச்சி பெற்று உயர்வதும் சில பிரிவுகள் நலிந்து தாழ்வதும் சமூக நடைமுறை. மிகவும் ஒடுக்கப்பட்ட சாதியினர், மதம் மாறி, எந்த விமோசனமும் பெறவில்லை. ஏனெனில் புரட்டாஸ்தாந்து கிறிஸ்தவர்கள் மதம் மாறினாலும் சைவத்தின் சாதியமைப்பை முற்றாக உதறிவிடவில்லை. (இஸ்லாம் மட்டுமே சாதி விடயத்தில் ஒரு குறிப்பிடத்தக்க விலக்காக இருந்தது எனலாம்.)

ஹூல் தனது கூற்றுக்களுக்குத் தரும் ஆதாரங்கள் பலவீனமானவை. படுசராசரியான எழுத்தாளர் எவரதும் எழுத்தை மேற்கோள் காட்டி அதுவே (சைவத்) தமிழ் ஆய்வாளர்களது பொதுவான அணுகுமுறை என்னும் விதமாகத் தனது ஆய்வில் அவர் பல முறை காட்ட முனைவது சீரிய ஆய்வு முறையின் பாற்பட்டதல்ல.

சைவர்களல்லாதவர்களது பங்களிப்பை மதிப்பதில்லை என்ற குற்றச்சாட்டு சைவ வேளாளச் சாதியப் பண்டிதர்கள் மீது சுமத்தப்படுவதில் மிகவும் நியாயம் இருக்கலாம். அதைப், பொதுவாக, முழுச் சமூகத்தின் மீதும் சுமத்துவதும் முற்போக்குச் சிந்தனையாளர்களது நிலைப்பாட்டை மறைப்பதும் நெறிப்பட்ட ஆய்வல்ல. (ஹூல், கைலாசபதி மீது தனது லண்டன் கட்டுரையில் வைத்த தவறான குற்றச்சாட்டை, இங்கு மீண்டும் கூறாததற்கு, அவர் அப்போது சந்தித்த எதிர்ப்பு ஒரு காரணமாயிருக்கலாம். ஆயினும் தமிழுக்கு இஸ்லாமிய கிறிஸ்துவப் பங்களிப்புக்கள் நெடுங்காலமாகவே அடையாளங் காணப்பட்டுப் போற்றப்பட்டுள்ளதை அவர் எங்கும் குறிப்பிடவில்லை). சாதியத்திற்கு எதிரான வெகுசன இயக்கங்கள் கூட அவரது அக்கறைக்கு உரியனவல்ல.

> **ஈழத் தமிழ்ச் சமூகம் மதச் சார்பற்ற ஒரு இன அடையாளத்தை நோக்கி நகரும் தேவை இன்று ஏற்பட்டு வருகிறது. அது பரஸ்பர புரிந்துணர்வுடன் மட்டுமே இயலுமானது. மத அடையாளங்களை மட்டுமன்றித் தம் சமய மேம்பாடுகளையும் வலியுறுத்தும் விவாதங்கள், அவசியமற்ற சமயச் சண்டைகளைக் கிளறி விடும். ஓய்ந்து கிடக்கும் சில பழமைவாதப் பிற்போக்கு வாதிகள் காய்ந்து வரும் பழைய புண்களைக் கறள் ஊசியால் கிளற மட்டுமே இது வழி வகுக்கும்.**

யாழ்ப்பாணச் சமுதாயத்தின் கலாசார அடையாளத்தின் அடிப்படை சைவமும் தமிழும் என்ற கருத்தை மறுக்கும் ஹூல், யாழ்ப்பாணச் சமூகத்தின் சாதியமும் ஆணாதிக்கமும் தமது நியாயத்தை எங்கிருந்து பெற்றதாகக் கருதுகிறாரோ தெரியாது. யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகத்திற்கு சைவமும் தமிழும் அடிப்படையான கலாசார அடையாளம் என்பதும் அவை மட்டுமே அடையாளம் என்பதும் ஒன்றல்ல என அவர் அறியக் கூடும். இன்று சாதியமைப்பின் தகர்வுக்கான அறிகுறிகள் வலிவுபெறும் சூழலில் அந்தக் கலாசாரம் 'சைவமும் தமிழும் அல்லாத' மத அடையாளங்களையும் மதச் சார்பற்ற அடையாளங்களையும் கூடிய அளவில் உள்வாங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஹூலின் மிகவும் மோசமான கூற்றுக்கள் நாவலர் பற்றியன. நாவலரின் பங்களிப்புக்கள் என்ன, அவற்றின் வரலாற்று, இலக்கிய, மொழியியல் முக்கியத்துவம் என்ன என்று மிகவும் விரிவான முறையில் (சைவத் தமிழ் வேளாள நோக்கிலிருந்தும் விலகி நின்று) பாரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றைப் புறக்கணித்து ஆறுமுக நாவலரது பங்களிப்பை நிராகரித்து ஹூல் பேசியதும் எழுதியுள்ளதும் அவரது ஆய்வின் தரத்தை அதல பாதாளத்துக்கே தள்ளியுள்ளது.

ஹூலின் சைவ - வேளாள விரோதத்துக்குப் பல தனிப்பட்ட நியாயங்கள் இருக்கலாம். ஆயினும் வரலாற்றை அவற்றின் அடிப்படையில் வைத்து ஆராய்வது தவறான முடிபுகட்கே இட்டுச் செல்லும். கொலனி ஆட்சிக் காலத்தில் புரட்டஸ்தாந்து - சைவ மோதலின் போது நடந்த பல சம்பவங்களே மதப் பகைமைக்குக் காரணமாயின. அதில் ஒரு பக்கத்தை ஏற்று அதினும் முக்கியமான இன்னொரு பக்கத்தை அப்படியே தூக்கி எறிவது நல்ல ஆராய்வல்ல.

பழைய புரட்டஸ்தாந்துக் கிறிஸ்தவ மிஷன்காரரது மதத் திமிர் இன்னமும் சில கிறிஸ்துவர்களிடம் தொடர்ந்து இருப்பதும் வருந்தத்தக்கது. 1980 களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்தம் ஒரு பாடவிதானமாகப் புகுத்தப்படுவதை ஒரு கிறிஸ்தவ விரிவுரையாளர் , வன்மையாக எதிர்த்ததாகவும் சைவ சித்தாந்தம் கற்பிக்கப்படுவதற்காக வாதாடும் தேவை தனக்கு ஏற்பட்டதாகவும் அங்கு பேராசிரியராக இருந்த சிவத்தம்பி மூலம் அறிந்தேன். ஹூலுக்குக் கட்டுரை பற்றிய சில ஆலோசனைகளை வழங்கிய சிவத்தம்பி இது பற்றியும் அவரிடம் பேசி இருக்கக்கூடும்.

ஈழத் தமிழ்ச் சமூகம் மதச் சார்பற்ற ஒரு இன அடையாளத்தை நோக்கி நகரும் தேவை இன்று ஏற்பட்டு வருகிறது. அது பரஸ்பர புரிந்துணர்வுடன் மட்டுமே இயலுமானது. மத அடையாளங்களை மட்டுமன்றித் தம் சமய மேம்பாடுகளையும் வலியுறுத்தும் விவாதங்கள், அவசியமற்ற சமயச் சண்டைகளைக் கிளறி விடும். ஓய்ந்து கிடக்கும் சில பழமைவாதப் பிற்போக்கு வாதிகள் காய்ந்து வரும் பழைய புண்களைக் கறள் ஊசியால் கிளற மட்டுமே இது வழி வகுக்கும்.

மற்றப்படி ஹூல் சுட்டிக்காட்ட முயல்வது போல சி.வை.தாமோதரம்பிள்ளை சைவத்தை விடத் தமிழையே அதிகம் நேசித்து வலியுறுத்தினார் என்ற வாதத்தை அவரது பங்களிப்புக்களின் அடிப்படையில் மிகவும் எளிதாகவும் தெளிவாகவும் கூறமுடியும். அக்கருத்து எனக்கு மகிழ்வூட்டுவது.

சி.சிவசேகரம்.

## 'நவீன சிந்தனைக்காரர்'

தமிழையும் தமிழகத்தையும் உய்விப்பதற்கான மருந்துகளை மேனாட்டுச் சந்தையில் தேடுவது தமிழகத்து ஆய்வறிவாளர்கள் சிலரது பொழுது போக்கு. பொதுவாகவே இவர்கள் எதையாவது கண்டறிந்து அதைத் தாம் அரைகுறையாக விளங்கித் தமிழில் அறிமுகப்படுத்துவதற்கு முதலே அவர்களது கண்டுபிடிப்பு அதன் சொந்த மண்ணிலேயே செல்லாக் காசாகி விட்டிருக்கும். ஆயினும், தாங்கள் எங்கேயோ அரைகுறையாக உள்வாங்கிக் கொண்டதைத் தாங்கள் புதிதாகக் கண்டறிந்தது போலவும் அதற்குச் சாட்சியாக உச்சரிக்கக் கடினமான அயற்சொற்களையும் பேர்களையும் உதிர்ப்பது இவர்களது உபாயங்களில் முக்கியமான ஒன்று. இந்தச் சிந்தனைகளை எல்லாமே பயனற்றன என்று நாம் ஒதுக்க அவசியமில்லை. அது நியாயமுமில்லை. அவை ஏன், எவரால், எந்தச் சூழ்நிலையில், எந்த நோக்கில் பயன்படுத்தப்பட்டன என்பதும் அவற்றின் சிறப்பான வலிமை என்ன என்பதும் நமக்கு முக்கியமானது. அதன் அடிப்படையில் இந்தப் புதிய ஆய்வுமுறைகள் மூலம் செய்யக்கூடியன இவற்றின் சிக்கலான சிந்தனைகளின் உதவியில்லாமலே செய்ய முடியாதனவா என்றும் நாம் அறிய வேண்டியுள்ளது. நமது நவீன சிந்தனைக்காரர்கட்கு ஏனோ அந்தவிதமான கவலைகள் எதுவுமே இல்லை. இதன் விளைவாக, எதையும் அறிமுகப்படுத்தும் போதே மிகவும் குழப்பமான மொழி நடையில் அறிமுகப்படுத்துவதும் விவாதங்களை எல்லாம் ஒரு சிறு குழுவுக்கே உரிய சங்கேத மொழிகளில் நடத்துகிற ஒரு பாவனையைக் கடைப்பிடிப்பதும் ஒரு 'மரியாதைக்குரிய' போக்காக இருந்து வருகிறது.

அண்மைக் காலமாக அமைப்பியல் பற்றிய விவாதம் இந்தப் புதிய வித்துவான்களின் வட்டத்திற்கு வெளியே கொஞ்சம் தெரிந்துள்ளமை உண்மை. தமக்கு ஏற்க முடியாத கருத்துக்களைச் சொல்கிறவர்களை எல்லாம் உமக்கு அமைப்பியல் தெரியுமா, அந்நியமாதல் தெரியுமா, பின் நவீனத்துவம் தெரியுமா, இருத்தலியல் தெரியுமா என்ற விதமான கேள்விகளால் மடக்குகிற வித்தையை விட இவர்கள் வசம் அதிகம் இல்லை என்பது பரவலான வாசகர்கட்குச் சிறிது விளங்கிவிட்டது. அது மட்டுமன்றி, இந்தப் புதுச் சிந்தனைகளை ஆய்ந்தறிந்து கண்ட இந்த மேதைகள் தமது சிந்தனை முறைகளைப் பற்றி விளக்குவதற்குச் சொன்ன எவற்றையும் விட அவற்றில் அதிக ஈடுபாடில்லாதவர்களும் அவற்றை மறுப்பவர்களும் அவை பற்றி முன்வைத்த தகவல்களிற் கூடிய தெளிவு இருந்தது.

புதிய சிந்தனைகளைத் தமிழகத்துக்கு அறிமுகப்படுத்துகிற இந்தப் புண்ணியவான்கள் ஏன் அவற்றைப் பரவலான முறையில் அறியப்படும் விதமாக மற்றவர்களுக்கு அறிமுகம் செய்வதில்லை என்பது ஒரு முக்கியமான கேள்வி. மற்றவர்கட்கு இவை விளங்காது என்பது அவர்களது எண்ணம் என்றால், இவர்கள் தங்கள் கைவசம் உள்ள ஒரு மாயவித்தை மூலம் சமுதாயத்தைச் சரியாக ஆய்ந்தறிந்து மாற்றி உய்விக்கும் வல்லமையையுடைய ஒரு புதிய புரோகித வர்க்கமாக (சாதியாக?) தங்களைப் பேண விரும்புகிறார்களா? தாம் சிரமப்பட்டுக் கற்றறிந்த வித்தையை மற்றவர்களுடன் பகிர இவர்கள் தயங்குகிறார்கள் என்றால் இது ஏதோ தொழில் இரகசியம் போன்ற ஒன்றாக இருக்க வேண்டும்.

பின் அமைப்பியல், பின் நவீனத்துவம் என்ற பேரில் ஒரு புதுவிதமான மாயாவாதம் தமிழகத்தில் புகுத்தப்படுகிறது என்பது தெளிவு. இந்த மாயாவாதத்தையும் அவற்றின் மூலக் கோட்பாடுகளையும் நாம் குழப்பிக் கொள்ளக்கூடாது. இக் கோட்பாடுகளை ஓரளவு தெளிவாக அறிமுகப் படுத்துவது போல எடுக்கப்பட்டுள்ள சில முயற்சிகளில் தமது அகச்சார்பான சில நிலைப்பாடுகளை நிறுவுவதையும் குறிப்பாக மாக்ஸியத்தை நிராகரிப்பதையுமே தமது இலக்காக இவர்கள் கொண்டுள்ளார்கள் என்பதை நாம் அறிய முடிகிறது. மாக்ஸிய ஆய்வுமுறையை மட்டுமன்றி, மாக்ஸிய மனித சமத்துவக் கோட்பாட்டையும் தூக்கி எறிந்து, மக்களைப் பிளவுபடுத்தும் முறையில் சாதி, பிரதேசம், மதம், பூர்விகம் போன்ற அடிப்படைகளில் கோஷ்டி சேர்க்கும் முயற்சிகட்கு இந்தப் ''புதிய'' சிந்தனைகள் மூலம் நியாயங்களைக் கற்பிக்க இவர்கள் முற்படுகின்றனர்.

அண்மையில் ஒரு சில ஆய்வறிவாளர் மத்தியில் இந்த அணுகுமுறைகள் மூலம் சமுதாய முரண்பாடுகள் பற்றிய சில விறைப்பான பார்வைகள் தகர்க்கப்பட்டுள்ளன என்று ஒருவர் பிரகடனம் செய்தார். இதை மறுத்து இன்னொருவர், வெகு நிதானமாக, ''இந்த நவீன சிந்தனையின் உதவியில்லாமலே மாஓ சேதுங் சீனா போன்ற ஒரு சிக்கலான சமுதாய அமைப்பைச் சரியாக அடையாளங் கண்டு போராட்டத்தை முன்னெடுத்துச் சென்று எதிரியை விழுத்த முடிந்தது எவ்வாறு?'' என்று கேட்டார். தொடர்ந்து அவர் கூறியதாவது: ''எந்தப் புதிய சிந்தனை முறையையும் ஆய்வு முறையையும் நாம் நிராகரிக்கக் கூடாது. ஆயினும் நம்வசம் உள்ள ஆய்வு முறையில் உள்ள எந்தக் குறைபாடுகளைப் புதிய அணுகுமுறை மூலம் தவிர்க்க முடியும் என்பது பற்றித் தெளிவு இருக்க வேண்டும்'', புதுமை புதுமைக்காகவே என்ற போக்கும் சிக்கலான சிந்தனையே சிறப்பானது என்ற மயக்கமும் அகற்றப்பட வேண்டியவை.

இந்தப் புதிய சிந்தனைக்காரர்களின் மிரட்டல்களின் முன் சில ஆய்வறிவாளர்கள் மிரள்வது உண்மை. அண்மையில் ஒரு ஈழத்துப் பேராசிரியர் ஒரு படைப்பாளியிடம் பின் அமைப்பியல் பற்றிய அறிவு அவரது படைப்பைப் பாதிக்கவில்லையா என்று கேட்ட போது அந்தப் படைப்பாளி, பிற படைப்புக்கள் தனது படைப்பின் மீது தன்னையறியாமலே ஒரு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என்றாலும் ஒரு ஆய்வுமுறை எப்படித் தன் ஆக்கத் திறமையைப் பாதிக்க முடியும் என்று விளங்கவில்லை என்று பதில் கூறினார் என அறிகிறேன்.

நம் முன்னுள்ள பெரிய பிரச்சனை இந்தப் புதிய சிந்தனைப் போக்கு எதையும் ஏற்பதா, எதிர்ப்பதா என்பது பற்றியதல்ல. இவற்றின் பேரால் நடக்கும் தில்லுமுல்லுகள் முதலில் அம்பலப்படுத்தப்பட வேண்டும். அந்தளவுக்கு இவை பற்றிய அடிப்படையான அறிவு நமக்குத் தேவை. எந்த ஆய்வு முறையும் மாக்ஸியத்தின் வரலாற்றுத் தேவையை நிராகரிக்கவோ திரிக்கவோ பயன்படுமாயின் கூட அதைக் கவனமாக ஆராய்ந்து அதன் நல்ல அம்சங்களை உள்வாங்கி அதன் கெடுதலான அம்சங்களை அம்பலப்படுத்துவதற்கு நமக்கு ஒரு பொறுப்பு இருக்கிறது என்பது உண்மை.

இ.தி.கோணாமலை.

நன்றி - நூலகத்திட்டம்



# அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிராக உலக மக்களின் போராட்டப் பிரகடனம்

ஏகாதிபத்தியம் என்பதே இன்று இல்லை என்று ஏகாதிபத்திய சார்பு புத்திஜீவிகள் கூறுகின்றனர். ஆனால் இன்று ஏகாதிபத்தியம் பழைய வடிவங்களிலன்றி புதிய வடிவங்களில் எவ்வாறு நாடுகளையும் மக்களையும் அடக்கியும் சுரண்டியும் வருகின்றன என்பதை அமெரிக்காவின் 'தொழிலாளர் உலகம்' என்ற கட்சியினதும் சர்வதேச நடவடிக்கை நிலையத்தினதும் பிரதிநிதி தோழர் சாரா பிளன்டர்ஸ் தெரிவித்தார்.

இன்று அமெரிக்க ஏகாதிபத்தியம் நூறு நாடுகளில் அதன் படைகளையும் இராணுவத் தளங்களையும் வைத்திருக்கின்றது. உள்நாட்டில் மக்கள் விரோத நடவடிக்கைகளை எடுப்பதிலும் ஏனைய நாடுகளின் விடயங்களில் தலையிடுவதிலும் இருபது நிறுவனங்களும் கலாசார ரீதியாக ஏகாதிபத்தியத்தினை நிலைநிறுத்தி வருகின்றன. உலக நாட்டு வளங்கள் அனைத்தையும் அவை தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கின்றன என்று 'பெண்களின் பரஸ்பர பாதுகாப்பு' என்ற அமைப்பின் வட அமெரிக்க பிரதிநிதி லெனோரா போர்ஷ்டெல் குறிப்பிட்டார்.

அமெரிக்காவிற்கு புலம் பெயர்ந்துள்ள வெளிநாட்டவர்களை அமெரிக்கா படுத்தும்பாட்டை பார்த்தால் வெளிநாடுகளில் 'ஜனநாயகத்துக்காக' அமெரிக்கா வடிப்பது நீழிக்கண்ணீர் என்பது தெளிவாகும். வெளிநாட்டவர்களையும், அகதிகளையும் அமெரிக்க ஏகாதிபத்தியம் ஈவிரக்கமின்றி சுரண்டியும், அடக்கியும் இலங்கை பொதுஜனஐக்கிய முன்னணி அரசாங்கத்தை குளிரச் செய்துள்ளது. மறுபக்கத்தில் தமிழ் மக்களின் போராட்டத்துக்கு எதிரான நிலைப்பாட்டை அமெரிக்கா வெளிப்படையாகவே பிரகடனப் படுத்தி விட்டது என்று கூறலாம்.

இலங்கை தமிழ் மக்களின் போராட்டத்தில் குறுகிய தேசியவாத சக்திகளை தூண்டி வளர்த்ததன் மூலமும் தமிழ் தீவிரவாதத்தை இலங்கை மண்ணுக்கு ஏற்றுமதி செய்ததன் மூலமும் இன்றைய இலங்கையின் குழம்பிய சூழ்நிலைக்கு பெரிதும் பொறுப்பெடுக்க வேண்டிய இந்திய ஆளும் வர்க்கம் மௌனமாகி இருக்கிறது. இலங்கைத் தமிழ் மக்களின் போராட்டத்துக்கு அமெரிக்காவால் பெரும் சவால்விடுக்கப்பட்டுள்ளது.




*கல்கத்தா நகரில் இடம் பெற்ற ஏகாதிபத்திய எதிர்ப்பு மாநாட்டின் முடிவில் ஈராக் மீதான அமெரிக்கத் தலையீட்டை எதிர்த்து இடம் பெற்ற ஊர்வலத்தில் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடன் மாநாட்டு அழைப்பாளர்களும் இணைந்து அமெரிக்க உதவித் தூதரகம் நோக்கிச் செல்கின்றனர். இடமிருந்து இரண்டாவது தோழர் தம்பையாவும் நான்காவது வீ.ஆர்.கிருஷ்ண ஐயரும் காணப்படுகின்றனர்.*

பயங்கரவாதியாக இருக்கும் ஏகாதிபத்தியம் விடுதலை இயக்கங்களை பயங்கரவாத இயக்கங்கள் என்று பிரகடனப்படுத்தி வருகிறது. இந்நிலையில் ஏகாதிபத்தியத்தின் உலக மயமாதலுக்கு எதிரான சுலோகம் அடக்கப்பட்ட மக்களின் சர்வதேசியமாகவே இருக்க முடியும். அழிவுபூர்வமான ஏகாதிபத்தியத்தை தோற்கடிக்க வேண்டுமாயின் அதற்கு எதிரான சர்வதேச ஒத்துழைப்பு என்பது அவசியம். அமெரிக்க மக்களும் அமெரிக்க முற்போக்கு ஜனநாயக சக்திகளும் எப்போதும் உலக மக்களின் பக்கமே இருக்கிறார்கள். வியட்நாமில் அமெரிக்கா புரிந்த கொடூரங்களுக்கு எதிராக அமெரிக்க மக்கள் வியட்நாமிய மக்களின் தேசவிடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவளித்தது தெரிந்ததே என்றும் அவர் தெரிவித்தார்.

'முன்னெப்பொழுதும் இல்லாதவாறு 'கலாசார ஏகாதிபத்தியத்தின் - கலாசாரரீதியாக ஏகாதிபத்தியம் முன்னெடுக்கும் வேலைகள் அதிகம். அதில் அவை வெற்றியும் கண்டுள்ளன. இன்று தொடர்பூடகங்களை கட்டுப்படுத்தும் இருபது பெரிய நிறுவனங்கள் இருக்கின்றன. அவை அணுவாயுதங்கள் போன்றவற்றை கட்டுப்படுத்தும் சக்திகளாகவும் இருக்கின்றன. 'நேட்டோ' அமைப்புடன் கைகோர்த்து செயற்படும் அந்த வருகின்றது. அமெரிக்காவில் ஒதுக்கப்பட்டவர்களாக இருக்கும் வெளிநாட்டவர்களையும், ஏகாதிபத்திய அமைப்பு எவ்வாறு வதைக்கின்றது என்பதை உலக நாட்டு மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்று அமெரிக்காவின் இன்னொரு பிரதிநிதியான லில்லியா வெலஸ்கியூ தெரிவித்தார்.

இந்திய ஆளும் வர்க்கம் இன்று அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்து கொண்டுள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலகமயமாதலுக்கு ஆதரவாக மட்டுமன்றி இப்பிராந்தியத்தின் அமெரிக்காவின் பாதுகாப்பு இராணுவ தலையீடு அனுமதிக்கின்றது. இன்று இலங்கையின் பொருளாதார கலாசார துறைகளில் மட்டுமன்றி இராணுவரீதியிலும் அமெரிக்காவின் செல்வாக்கு அதிகரித்துள்ளது. வரலாற்றில் என்றுமில்லாதவாறு இலங்கையின் அரசாங்கப் படைகளுக்கு இராணுவ உபகரணங்களையும், ஆயுதங்களையும், ஆலோசனைகளை பயிற்சிகளையும் வழங்குவதிலும் அமெரிக்க ஏகாதிபத்தியம் முன்னணியில் இருக்கின்றது. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக ஆயுதப் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்து வரும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கம் என்று பிரகடனப்படுத்தியதன் மூலம் இலங்கையில் அமைதியை நிலைநாட்டுவதற்கும் தேசிய இனங்களினது உரிமைகளை உறுதி செய்வதற்குமான போராட்டம் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டமாக வளர்ச்சியுடைய வேண்டியது தவிர்க்க முடியாததாகும்.

எனவே அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிராக கிளர்ந்தெழுகின்ற இலங்கையின் சகல தேசிய இனங்களுக்கும் சர்வதேசரீதியாக ஒத்துழைப்பு அவசியமானது. குறிப்பாக இந்திய மக்களினதும், குறிப்பாக இந்திய மக்களினதும், இந்திய இடதுசாரி முற்போக்கு ஜனநாயக சக்திகளின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும்'' என்று புதிய - ஜனநாயக கட்சியின் தேசிய அமைப்பாளர் தோழர் இ.தம்பையா தெரிவித்தார்.

குளாம் கோஷ், சுபாஸ்சந்திர போஸ், ரவீந்திரநாத் தாகூர் போன்ற ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடிய தேசிய விடுதலை வீரர்கள் தோன்றிய மண்ணில் கடந்த நவம்பர் 16, 17 ஆகிய தினங்களில் ஏகாதிபத்திய எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது.

அகில இந்திய ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம் இந்தியாவின்

தொடர்ச்சி பக்கம் 11இல்

## இவர் யார்?



இவர் தோழர் ரோசா லுக்சர்பர்க். இவர் பாட்டாளிவர்க்க ஜனநாயகம் பற்றி எடுத்துக்கூறிய போது லெனின், டிரொஸ்கி என்போர் பற்றியும் போல்ஷிக் கட்சி பற்றியும் சில விமர்சனங்களை செய்துள்ளார். இவர் அக்கருத்துக்களை முன்வைத்துள்ள காலகட்டத்தில் ரஷ்ய புரட்சி எதிர்கொண்டிருந்த யதார்த்த நிலைமைகளில் அவரின் விமர்சனங்கள் பாதிப்பை ஏற்படுத்தியதால் அவர் தவறுகளை செய்ததாகவே கொள்ளப் பட்டது.

இவரை போலந்தின் டிரொஸ்கி என்று ஸ்டாலின் குறிப்பிட்டிருந்தார். இவர் சிறையில் இருக்கும் போது ரஷ்ய புரட்சி' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரை ரஷ்ய புரட்சிக்கு எதிரான கருத்துக்களை பரப்புபவர்களுக்கு உதவியிருந்தன. ஆனால் இவர் கட்சியின் சர்வாதிகாரம், ஜனநாயகம் என்பன தொடர்பாக முன்வைத்த விமர்சனங்களை இலகுவாக தட்டிக்கழித்து விடமுடியாதிருக்கிறது.

போலந்து ரஷ்யாவின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த போது ரஷ்ய ஜாரிசத்திலிருந்து மக்களை விடுவிப்பதும் போலத்து மக்களை அந்நிய ராட்சியிலிருந்து விடுவிப்பதும் சிறுபான்மையினரான யூதமக்களை மிகக் கொடுமையான ஒடுக்குமுறையிலிருந்து விடுவிப்பதும் போலந்தின் புரட்சியாளர்களின் முக்கிய கடமைகளாக இருந்தன. தொழிலாளர் கட்சியில் சேர்ந்து மேற்கூறப்பட்ட கடமைகளை நிறைவேற்றும் வரலாற்றுப் பொறுப்பை ரோசா ஏற்றுக் கொண்டார். அவர் மேலும் பல புரட்சிகர அமைப்புகளுடன் சேர்ந்து இயங்கும் போது பொலிசாரால் தேடப்பட்டார். இவர் பொலிசாரின் பிடிக்குள் அகப்படாமல் ஜீரிச்சிற்கு சென்று பின்னர் ஜேர்மனிக்கு சென்றார். ஒரு பாதிரியாரை ஏமாற்றி அவரின் உதவியுடன் ஒரு விவசாயின் வண்டியில் வைக்கோலுக்கடியில் மறைந்தபடி நாட்டெல்லையைக் கடந்தார்.

இவர் ஜெர்மனியில் இருக்கும் போது ஜேர்மனியின் பாட்டாளி வர்க்க இயக்க நடவடிக்கைகளுடன் தன்னை இணைத்துக் கொண்டார். அங்கிருந்து போலந்து புரட்சிவாதிகளை கொண்டு போலந்து தொழிலாளர் கழகத்தை உருவாக்கினார்.

இவர் போலந்தின் விடுதலை பற்றி கூறிய கருத்துக்களில் மாக்ஸ், ஏங்கல்ஸின் கருத்துக்களிலிருந்து மட்டுமன்றி லெனினுடைய கருத்துக்களிலிருந்தும் வேறுபட்டிருந்தார். 'பொது விதிகளை உருவாக்கி தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது என்றும் தெரிவித்தார். 'போலந்தில் தேசிய விடுதலைப் போர் சாத்தியமில்லை, போலந்து பாட்டாளி வர்க்கமும் ரஷ்ய பாட்டாளி வர்க்கமும் இணைந்து ஜாரிசத்தை தூக்கி எறிவதன் மூலம் சோஷலிஸ புரட்சியை நடத்துவதன் மூலம் போலந்து விடுதலை பெறமுடியும்' என்று ரோசா குறிப்பிட்டார்.

இவரை பற்றி லெனின் 'உலக முழுவதுமுள்ள கம்யூனிஸ்டுகளின் பல தலைமுறைகளுக்கும், ரோசாவின் வாழ்க்கை வரலாறும் அவரது எழுத்துக்கள் முழுவதும் பயனுள்ளவையாக இருக்கும் என்றும் இவரை வானத்தில் உயர உயரப் பறந்து செல்லும் மலைக் கழுகு' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இவர் 1871 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5 ஆம் திகதி போலந்திலுள்ள சமோஸ் நகரத்தில் பிறந்தார். இவர் ஜேர்மன் தொழிலாளர் கட்சியிலும் அது பெயர் மாற்றம் செய்யப்பட்டு ஜேர்மனிய சோஷலிஸ தொழிலாளர் கட்சியாக செயற்பட்ட போதும் அதில் செயற்பட்டார். பின்னர் ஜேர்மன் சமூக ஜனநாயக கட்சியாக பெயர் மாற்றம் செய்யப்பட்ட போதும் அதில் செயற்பட்டு கட்சிக்குள் புரட்சிக்காக உட்கட்சி போராட்டங்களையும் முன்னெடுத்தார். பின்னர் ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப் பட்டது. அதில் இணைந்து செயற்பட்டார். இவர் சிறந்த பேச்சாளரும் எழுத்தாளரும் - பத்திரிகையாளரும் ஆவார்.

இளமை காலத்தில் இவரின் இடுப்பில் ஏற்பட்ட வலிக்கு மருத்துவம் செய்யப்பட்டாலும் இவர் ஊனமானார். ரஷ்யாவில் அக்டோபர் புரட்சி நடந்து கொண்டிருக்கும் போது ஜேர்மனிய கம்யூனிஸ்ட் கட்சியினரும் ஸ்பார்ட்டகஸ் அமைப்பினரும் நேர்மையான சமூக ஜனநாயகவாதிகளும் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

ரோசா ஜேர்மனிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு தலைவியாக இருந்ததுடன் புரட்சிக்கு வழிகாட்டிய புரட்சிகரக் குழுவிற்கும் தலைமை தாங்கினார்.

1919 ஆம் ஆண்டு ஜனவரி 15 ம் திகதி இரவு 9 மணிக்கு ரோசாவையும் இன்னொரு தலைமை தோழரான கார்ல் லீப்நெக்ட்டையும் ஜேர்மனிய அரச (நாஜி) படைகள் கைது செய்தனர். கார்ல்லீப்நெக்ட்டின் தலையில் துப்பாக்கியால் அடித்து கொன்றனர். சிறிது நேரத்தின் பின்னர் ரோசாவையும் அழைத்துச் சென்று தலையின் பின்புறத்தில் துப்பாக்கியால் அடித்து பின் காரில் ஏற்றுக் கொண்டு செல்கையில் மீண்டும் மண்டையின் பின்புறத்தில் துப்பாக்கியால் அடித்துக் கொன்றனர். அவரது உடலை லாண்ட்வெர் கால்வாயில் போட்டனர் என்று அறிய வந்தது.

ஆனால் ஜனவரி 16 ஆம் திகதிய மதிய பத்திரிகையொன்றில் தப்பி ஓட முயற்சிக்கும் போது லீப்நெக்ட் சுட்டுக் கொல்லப்பட்டார் என்றும் ரோசா ஜனங்களால் அடித்துக் கொல்லப்பட்டார் என்றும் செய்தி வெளியாகி இருந்தது.

நன்றி - நூலகத்திட்டம்



10ம் பக்கத் தொடர்...

## அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிராக...

மேற்கு வங்காள மாநிலத்தின் தலைநகரான கல்கத்தாவில் நடத்திய இம் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதிநிதிகள் மேற்படி கருத்துக்களை தெரிவித்தார்.

சமகால உலக நிலையில் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்களின் வளர்ச்சியின் அவசியம்' என்ற தலைப்பில் நவம்பர் 16ம் திகதி மாநாடு விரிவாக ஆராய்ந்தது. 17 ஆம் திகதி 'ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்களை வளர்த்தெடுப்பதற்கான சாத்தியங்கள் பற்றி ஆராயப்பட்டது.

இம்மாநாட்டிற்கு அகில இந்திய ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தின் தலைவர் ஓய்வு பெற்ற இந்திய உயர்நீதிமன்ற நீதியரசர் வீ.ஆர். கிருஷ்ணஐயர் தலைமை தாங்கினார்.

ஈராக் மீது அமெரிக்க ஏகாதிபத்தியம் மேற்கொண்டுவரும் அப்பட்டமான அத்துமீறல்களை கண்டித்து 17 ஆம் திகதி கல்கத்தா நகரில் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றும் நடைபெற்றது. ஊர்வலத்தின் முடிவில் கல்கத்தாவிலுள்ள அமெரிக்க உதவி ஸ்தானிகளிடம் ஈராக் மீதான அமெரிக்க தலையீட்டையும், நெருக்கடிகளையும் கண்டித்து அமெரிக்க ஜனாதிபதி கிளின்டனுக்கு விலாசமிடப்புட்டு வெளிநாட்டுப் பிரதிநிதிகளால் கையொப்பமிடப்பட்ட மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

'ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் உலகமக்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிராக அவர்களது பிரதான குறியை வைக்க வேண்டும்'' என்பதை பிரகடனப்படுத்திய கல்கத்தாவில் நடைபெற்ற எழுச்சிகரமான மாநாட்டிலும், அமெரிக்க எதிர்ப்பு கோஷங்களால் கல்கத்தாவில் நண்பகல் நேரகாற்றை மேலும் உஷ்ணமாக்கிய ஆர்ப்பாட்ட ஊர்வலத்திலும் இந்தியாவின் பலபாகங்களிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொண்டதுடன் அமெரிக்கா, ரஷ்யா, பெல்ஜியம், நெதர்லாந்து, துருக்கி, ஜெர்மனி, இலங்கை, நேபாளம், பங்களாதேஷ் போன்ற நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டில் சர்வதேசரீதியாக ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்களை ஒருமுகப்படுத்த நாடுகள் தோறும் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்களையும் போராட்டங்களையும் முன்னெடுக்க வேண்டும் என்று அறைகூவல் விடுக்கப்பட்டு பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஏகாதிபத்தியத்துக்கு எதிரான முதலாளித்துவத்திற்கு எதிரான நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்தி முன்னெடுப்பதில் சோஷலிஸ நாடுகள் முக்கிய பங்காற்றி சர்வதேச அமைதியையும், ஒத்துழைப்பையும் உறுதி செய்ய வேண்டும் என்று ரஷ்ய பிரதிநிதி பேராசிரியர் பெரிச்சேவ் வேண்டுகோள் விடுத்தார்.

1ம் பக்கத் தொடர்...

## சிறைச்சாலைக் கோலைகளை

மூலமே முக்கியமான ஒன்றாகக் கொள்ளப்படுகிறது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர்கள் தமிழர்கள் என்ற விசேட தகமையினால் நரகத்திலும் நரக வேதனையை அனுபவித்து வருகின்றனர்.

சிறைச்சாலைகளில் தடுப்பு நிலையங்களில் அடிப்படை வசதிகள் மிக மிக மிகக் குறைவானவையாகும். உணவு தரமற்றவையாக வழங்கப்படுகின்றன. உறவினர்கள் கொண்டு செல்லும் உணவுகளை வழங்குவதில் கெடுபிடிகள், போதியளவு நீர், மலசல கூட வசதிகள் இல்லாமை சிறிய இடங்களில் அதிகமானோர் அடைத்து வைக்கப்படுதல், காற்றோட்ட வசதியின்மை, ஆயுட்காலக் கைதிகளின் அச்சுறுத்தல், பாலியல் ரீதியான வன்முறைத் துன்புறுத்தல்கள், இனவெறித் திட்டுதல்களும் தாக்குதல்களும், உறவினர்கள் சென்று பார்வையிடுதலில் கெடுபிடிகள், போன்றவற்றை தடுத்து வைக்கப்பட்டவர்கள் நாளாந்தம் எதிர்நோக்கி நிற்கின்றனர். இவற்றுக்கும் மேலால் தமக்கு எதிரான குற்றச்சாட்டுகள் எவை என்பதோ என்ன காரணத்திற்காகத் தாங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளோம் என்பதை அறியாமலும் பலர் நீண்ட நாட்களாகச் சிறை இருந்து வருகிறார்கள்.

மேற்கூறிய நிலைமைகளை அரசாங்கத்திற்கும் வெளி உலகத்திற்கும் தெரியப்படுத்தும் நோக்கிலேயே தடுத்து வைக்கப்பட்டோர் உண்ணாவிரதப் போராட்டங்களில் ஈடுபட நேர்கிறது. அவ்வாறான ஒன்றே அண்மையில் மகசீன் சிறைச்சாலையில் இடம் பெற்ற உண்ணாவிரதமும் கூரை மீது ஏறி இருந்த சம்பவமாகும். ஆனால் இதில் இத் தடுத்து வைக்கப்பட்டோர் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர். பலவந்தமாக உணவு ஊட்டப்பட்டுள்ளனர். இதில் சிலர் மயக்கமடையவும் சிலர் இரத்தக் காயங்கள் படவும் நேர்ந்துள்ளது. பின்பு 223 தடுப்புக் காவல் கைதிகளை பஸ்களில் பலவந்தமாக ஏற்றி களுத்துறைச் சிறைச்சாலைக்கு மாற்றி உள்ளார்கள். அவர்களைப் படமெடுத்த பத்திரிகையாளர்களின் படச்சுருள்களைப் பொலீசார் பிடுங்கி அழித்துள்ளனர். இத்தகைய சிறைச்சாலை அநியாயங்களும் அடக்குமுறைகளும் முன்னைய ஆட்சிக் காலத்தின் காட்சிகளையே நினைவுக்குக் கொண்டு வருகின்றன.

இவ்வாறு களுத்துறைச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட தமிழ்க் கைதிகளில் மூவர் வெட்டியும் அடித்தும் கொல்லப்பட்டுள்ளனர். பத்துப் பேருக்கு மேல் படுகாயங்கள் அடைந்துள்ளனர். மகசீன் சிறைச்சாலையில் பாதுகாப்பு இல்லை எனக்கூறி களுத்துறைக்கு மாற்றப்பட்ட தமிழ் கைதிகளுக்கே இக்கதி நேர்ந்துள்ளது. மீண்டும் இந்த அரசாங்கத்தின் கீழும் சிறைச்சாலைப் படுகொலைகள் இடம் பெற்றுள்ளன. இது கறுப்பு யூலையின் சிறைச்சாலைப் படுகொலைப் பயங்கரத்தை மீள் நினைவுபடுத்தியுள்ளது.

அரசாங்கம் எவ்வளவிற்கு ஜனநாயகம் மனித உரிமை என்று நீட்டிப் பேசினாலும் நடைமுறையில் அவை எல்லாம் வெறும் பம்மாத்துக்களேயாகும். மனித உரிமை ஆணைக் குழு, மேலதிக நீதிமன்றத் திறப்பு என்பனவற்றால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை இன்றி இருந்து வரும் தமிழர்களுக்கு எவ்வித விமோசனமும் இல்லை. எனவே தடுப்புக் காவலில் உள்ளவர்களை துரித விசாரணைக்கு கொண்டுவரல் வேண்டும் அல்லது விடுதலை செய்ய வேண்டும் என்று மக்கள் இயக்கங்களைப் பலமுனைகளிலும் பலப்படுத்தி முன்னெடுக்க வேண்டும். சிறைச்சாலைகளில் வைத்து தமிழர்களைத் துன்புறுத்தாதே என்பதையும் அவ்வியக்கத்தில் இணைத்துக் கொள்வது அவசியமாகும். இடதுசாரி முற்போக்கு ஜனநாயக சக்திகளும் அமைப்புகளும் இதனை மேலும் விரிவுபடுத்தி முன்னெடுக்க வேண்டும்.

8ம் பக்கத் தொடர்...

## பாட்டாளி வர்க்க அரசியலையும்...

புரட்சி என்பது தவிர்க்க முடியாத இடைக்கட்டமாகும். இந்த இடைக் கட்டத்தை பாட்டாளி வர்க்க கட்சி கடப்பதற்காகவும் நேசசக்திகளை இனம் கண்டு அவற்றுடன் ஐக்கியப்பட வேண்டும்.

உள்நாட்டிலிருக்கும் புரட்சிகர கட்சிகளுடன் ஐக்கியத்தையும், உறவையும் வளர்ப்பது போன்று சர்வதேச புரட்சிகர கட்சிகளின் உறவும், ஐக்கியமும் அவசியம். சர்வதேச ரீதியாக கட்சிகள் சம அந்தஸ்தில் மதிக்கப்பட வேண்டியதுடன் என்ற இன்னொன்றுக்கு ஆணையிடுவது நிராகரிக்கப்பட வேண்டும்.

புரட்சி சமாதானமாக நடைபெறாது. அரசு யந்திரத்தை மாற்றி வர்க்கங்களை இல்லாதொழிப்பதே புரட்சி ஆகும். பாட்டாளி வர்க்க கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு வர்க்க எதிரிகள், எதிர்கருத்துக்கள் என்பவற்றுக்கு எதிராக போராட்டத்தையும், புரட்சியையும் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும்.

ஒரு நாட்டில் புரட்சி வென்றாலும், ஏகாதிபத்தியம் முதலாளித்துவம் என்பவற்றுக்கு எதிரான போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும்.''

மேற்கூறப்பட்டவைகள் யாவும் ஒரு புரட்சிவாதி கவனிக்க வேண்டிய ஆகக்குறைந்தளவான விடயங்களாகும். இவற்றுக்கு மாறான போக்குகள் 1960களில் குருசேவ் தலைமையில் சோவியத் யூனியனில் முன்னெடுக்கப்பட்டன. இப்போக்கை திரிபுவாதம் என்று எடுத்துக்கூறி இப்போக்கு எதிர் புரட்சிக்கே வழிவகுக்கும் என்பதை எடுத்துக்கூறி உலகமெங்கும் உள்ள மாக்சிஸ்ட் லெனினிஸ்ட்டுகள் போராடினார்கள்.

அப்போராட்டம் இலங்கையிலும் பிரதானமாக நடைபெற்றது. இந்நாடுகளில் மேற்படி (திரிபுவாத) போக்கிற்கு ஆதரவாகவும், எதிராகவும் என்று கம்யூனிஸ்ட் கட்சிகள் பிரிந்தன. இப்போக்கிற்கு எதிராக தோன்றிய இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (சீனசார்பு) முக்கிய தலைவர்களில் ஒருவராக தோழர் கே.ஏ.சுப்பிரமணியம் இருந்தார்.

இதனால் அவர் உயிரைப் பணயம் வைத்து கட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டார். இது அவர் சர்வதேச ரீதியாக கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கும் பாட்டாளி வர்க்கத்திற்கும் செய்த பங்களிப்பாகும். அவருடைய வாழ் நாளிலேயே அவரின் பாதை சரியானதென்பதும், திரிபுவாதம் பிழையானதும் சோஷலிஸத்தை தோல்வியடைய செய்வதுமாகும் என்பதும் நிரூபிக்கப்பட்டது.

தோழர் கே.ஏ.சுப்பிரமணியம் வடக்கில் சாதியத்துக்கு எதிரான போராட்டம், யூ.என்.பியின் கொடூரமான ஆட்சிக்கு எதிரான போராட்டம், சிங்கள பேரினவாதம் என்பவற்றுக்கு எதிரான போராட்டம் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டம் என்பவற்றில் முக்கிய இடத்தை வகிப்பது போன்று இலங்கையின் குறிப்பான சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாக்சியத்தைப் பிரயோகிப்பது தொடர்பாகவும் முக்கிய அடித்தளத்தை இட்டுள்ளார்.

நாளாந்த போராட்டங்களில் பங்கெடுத்தமையால் அவரை ஒரு மக்கள் நடவடிக்கையாளன் என்ற வரையறைக்குள் மட்டும் வைத்துப் பார்க்க முடியாது.

அதேபோன்று யூ.என்.பிக்கு எதிரான போராட்டத்தில் சிறிமாவோ தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனான அவரின் நெருக்கம் மேலோட்டமானதோ, வர்க்க ஆய்வுகளுக்கு அப்பாற்பட்டதோ அல்ல. ஐக்கியமும் போராட்டமும் என்ற அடிப்படையிலானது இது சமகாலத்தில் விரிந்தளவில் நோக்கப்பட வேண்டியதாகும்.

தமிழ் மக்களின் போராட்டத்துக்கும் தமிழ் மக்களின் போராட்டச் சக்திகளுக்கும் அவர் அளித்த ஆதரவு கூட வர்க்க பகுப்பாய்வுகளுக்கு அப்பாற்பட்டதல்ல என்பதும் விளங்கிக் கொள்ளப்பட வேண்டும்.

1ம் பக்கத் தொடர்...

## தோ.தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு

எவ்வளவு மட்டமான கண்டுபிடிப்பு.

இடதுசாரி தொழிற்சங்கத் தலைவர்கள் இந்த அரசாங்கத்திற்கு முட்டுக் கொடுத்துக் கொண்டு பத்திரிகை அறிக்கைகளில் மட்டும், 'சம்பளத்துக்காக' போராடும் ஜாம்பவான்களாக தென்படுகின்றனர்.

இன்று வாழ்க்கைச் செலவு அதிகரித்திருப்பது மட்டுமன்றி உலக சந்தையில் இலங்கையின் தேயிலைக்கு ஆகக்கூடிய விலை கிடைத்துள்ளது. தேயிலையின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளதாகவும் உற்பத்தி செலவு அதிகம் என்றும் சம்பள உயர்வை மறுப்பதற்காக தோட்டக் கம்பெனிகளும், முதலாளிமார் சம்மேளனமும் தொடர்ந்து சமர்ப்பிக்கும் வாய்ப்பாடாகும்.

இன்றைய நிலையில் இச்சந்தர்ப்பத்திலேயே தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு பெறப்பட வேண்டியதாக கொள்ளப்பட வேண்டும். பட்டினி நிலைக்கு வேகமாக தள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கு பிச்சைச் சம்பள உயர்வுகளால் மீட்சி கிடைக்காது.

தோட்டக் கம்பெனிகள் தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான மாத சம்பளத்தை உறுதி செய்ய வேண்டும் என்றும் நியாயமான வேலை நிபந்தனைகளையும், உறுதி செய்யவும் போராட வேணடியது அவசியம்.

ஆனால் இன்றைய நிலைமையிலிருந்து ஓரளவாவது வறுமைச் சுமையை குறைக்க வழி செய்யும் வகையில் குறைந்தது ஒரு நாளைக்கு 150/- சம்பளமாவது வழங்கப்பட வேண்டும். அதேவேளை அதிக வேலைநாட்கள் உறுதி செய்யப்பட வேண்டும் என்றே புதிய பூமி வலியுறுத்துகிறது.

இச்சம்பளத்தை அதாவது நாளாந்தம் 150 ரூபாவை வென்றெடுக்க நேர்மையான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். நேர்மையான போராட்டங்களில் மலையக மக்கள் அணிதிரள வேண்டும்.

மக்களை வீதிகளில் இறக்கி வீதிகளிலேயே விட்டுவிட்டு பாராளுமன்ற ஆசனங்களையும், மாகாண சபை ஆசனங்களையும் கைப்பற்றிக் கொள்ள எண்ணம் கொண்டுள்ள தொழிற்சங்கத் தலைவர்களை பற்றி அவதானமாகவே இருக்க வேண்டும்.

7ம் பக்கத் தொடர்...

## யார் உணவை...

ஆனால் அமைச்சரின் கூற்று வசதிபடைத்த வர்க்கத்தினருக்குப் பொருந்தக் கூடியதாகும். சனத்தொகையில் பத்து வீதத்திற்கு உட்பட்டவர்கள் அதிக உணவை மட்டுமன்றி உயர்ந்தவகை உணவுகளை உண்கிறார்கள் என்பது உண்மையானதாகும். அவர்கள் ஆடம்பரமாக வாழ்வதும் தேவைக்கு அதிகமாக உண்பதும் சுகபோகம் அனுபவிப்பதும் மறுக்கவியலாது. அவர்களை மக்கள் என்ற பொதுநிலைக்குள் உள்ளடக்க முடியாது. அத்தகையவர்கள் பாலுக்கு நல்ல ரக கற்கண்டு இல்லை எனக் கவலை கொள்வோராவர். அவர்களை கஞ்சிக்கு உப்பு கிடைக்காது கஷ்டப்படும் இந்நாட்டு சாதாரண மக்களுடன் எவ்வகையிலும் சேர்த்துக் கொள்ள இயலாது.

உணவு வர்த்தக அமைச்சர் இவ்வாறு கணக்குக் காட்டும் அதேவேளை இந்நாட்டை ஆளும் பாராளுமன்றத்தின் உணவு நிலை பற்றியும் விபரங்கள் வெளி வந்துள்ளன. பாராளுமன்ற உணவுச் சாலையில் அறுபத்தியேழு வகையான அறுசுவை உணவுகள் தயாரிக்கப்பட்டு பரிமாறப்படுகின்றன. சோறில் மூன்று வகை, கறிகளில் மரக்கறி, மீன், கோழி இறைச்சி, ஏனைய இறைச்சிகள், முட்டை போன்றன விதம் விதமாகச் செய்யப்படுகின்றன. கேக் வகைகள், கட்லெட், றோல்கள் எனப் பல வகைகளில் மாலை நேரத் தேனீர் கோப்பையுடன் கிடைக்கின்றன. பாராளுமன்ற அமர்வு நாட்களில் இவ்வகையான உணவுக்கான ஒரு நாட் செலவு நாலு லட்சமாகும். 225 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பாராளுமன்ற அலுவலர்களுக்குமான ஒரு நாள் உணவுச் செலவு நாலு லட்சம் என்றால் ஒருவருக்கு எவ்வளவு உணவு தேவை என்பதை உணவு அமைச்சரிடம் தான் கணக்குக் கேட்க வேண்டும். அத்துடன் இவ்வாறு தயாரிக்கப்படும் உணவில் முப்பது வீதம் விரயமாக்கி வீசப்படுவதாகவும் கூறப்படுகிறது.

ஆதலால் மக்களிடம் உணவைக் குறைத்து மிச்சம் பிடித்துத் தாருங்கள் என்று கூறுவதில் என்ன அர்த்தம் உண்டு. ஆளும் வர்க்கமும் அவர்களது பிரதிநிதிகளும் உண்டு கழித்து உப்பிப் பெருத்து நிற்கிறார்கள். ஆனால் சாதாரண உழைக்கும் மக்கள் உணவுக்கும் உடைக்கும் இருப்பிடத்திற்கும் ஏங்கித் தவித்து ஏழ்மையில் வாழ்ந்து வருகிறார்கள். பாரிய இவ் ஏற்றத்தாழ்வைப் பாதுகாப்பதும் மக்களை ஏமாற்றுவதும் மாறி மாறி ஆளும் முதலாளித்துவப் பாராளுமன்ற ஆட்சி அமைப்பின் அடிப்படை நிலைப்பாடாகும். இதனை மக்கள் பல வழிகளிலும் உணர்ந்து கொள்வது அவசியம்.

நன்றி - நூலகத்திட்டம்


# புதிய பூமி

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

PUTHIYAPOOMI

சுற்று 04 டிசெம்பர் 1997 சுழற்சி 17 10/=


# வடக்கு கிழக்கில் நேரடி யுத்தம்! தெற்கில் மறைமுக யுத்தம்!!

## யுத்தத்தை நிறுத்தி அரசியல் தீர்வுக்கான வற்புறுத்தல்




'இன்று வடக்குக் கிழக்கிலே நேரடியான யுத்தம் மிகக் கொடூரமான முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அதன் ஒவ்வொரு தாக்கமும் தெற்கிலே மறைமுக யுத்தமாக மக்கள் மீது நடாத்தப்படுகிறது. இத்தகைய நேரடி மறைமுக யுத்தத்தின் மூலம் ஒரு புறத்தில் அரசியல் பிழைப்பும் மறுபுறத்தில் பொருளாதார லாபம் ஈட்டுதலும் இடம் பெற்று வருகின்றன. அரசாங்கத்தில் உள்ளவர்கள் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ளவும் எதிர்கட்சியில் இருப்பவர்கள் அதிகாரத்திற்கு மீண்டும் வந்து விடவும் இன்றைய யுத்த சூழலைப் பயன்படுத்துகிறார்கள். இன்னும் தத்தமது பதவிகளும் சுகபோகங்களும் பறிபோக விடாது பார்த்துக் கொள்வதற்கும் சில அரசியல் கட்சிகள் யுதத்தில் குளிர்காய முற்பட்டுள்ளன. அதேவேளை அரிசி, பருப்பு, சீனி முதல் ஆயுதங்கள், வரை இறக்குமதியாக்கும் சிங்கள தமிழ் முஸ்லிம் பெரும் வர்த்தகர்களும் தரகர்களும் கோடிக் கணக்கில் கொள்ளை லாபம் பெறுவதற்கு யுத்தம் அவர்களுக்கு கை கொடுத்து நிற்கிறது. இதில் வேடிக்கை என்னவெனில் இத்தகையவர்கள் எல்லோரும் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் எனக்கூறி வருவதுதான். ஆனால் யுத்தம் வடக்கு கிழக்கு மக்களை அவலங்களுக்கு மேல் அவலங்களுக்கே இட்டுச் சென்றுள்ளது. இன்று அவர்களது துயரம் தோய்ந்த வாழ்வுக்கு எல்லைகளே இல்லாது போய்விட்டது.

குடாநாட்டில் இயல்பு வாழ்க்கை என்பது எட்டாக் கனியாகவே இருந்து வருகின்றது. காணாமல் போனோருக்காக அவர்களின் பெற்றோர் உறவினர்கள் எழுப்பும் கேள்விகளுக்கும் கோரிக்கைகளுக்கும் அரசாங்கம் உரிய பதிலைக் கொடுக்க முடியாது உள்ளது. ஆயிரத்து நானூறு பேர் வரை இன்று சிறைச்சாலைகள் தடுப்பு முகாம்களில் தடுத்து வைத்து சித்திரவதை செய்யப்படுகின்றனர். அண்மைய உதாரணம் தான் மகசீன் சிறைச்சாலைச் சம்பவமாகும். ரிவிரச யுத்தத்தின் மூலம் குடாநாட்டில் ஐம்பதினாயிரம் வீடுகள் சேதமாக்கப்பட்டன. அவற்றில் பத்தாயிரம் வீடுகள் தரை மட்டமாக்கப்பட்டுள்ளன. கடந்த இருபது வருடங்களில் குத்து மதிப்பாக எழுபதினாயிரம் தமிழ் மக்கள் பலமுனைகளாலும் கொல்லப்பட்டுள்ளனர். இக்கொலைகளில் இலங்கை ராணுவம் இந்திய ராணுவம் ஆயுதம் ஏந்திய சகல தமிழர் இயக்கங்கள் அனைத்தும் தாராளமாகச் சம்மந்தப்பட்டுள்ளன. குடாநாட்டில் மட்டும் இருபதினாயிரம் அநாதைக் குழந்தைகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. மட்டக்களப்பில் மட்டும் நாலாயிரம் பெண்கள் கணவன் மாரை இழந்து விதவைகளாகி நிற்கிறார்கள். குடாநாட்டில் ஒரு கிராமத்தில் நூறு விதவைகள் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. தெற்கிலே இதுபோன்ற சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன என்ற போதிலும் வடக்கு கிழக்கின் நிலைமை அவற்றை விடப் பன்மடங்கானவை ஆகும். தமிழ் மக்கள் தமக்கு மறுக்கப்பட்ட உரிமைகளையும் இழைக்கப்பட்ட அநீதிகளையும் கோரி நின்றமைக்காக யுத்தத்தின் மூலம் அடக்குமுறைகள் மூலம் வழங்கப்பட்ட கொடைகள் தான் மேற்கூறியவையாகும்.

எனவே தான் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என நாம் வற்புறுத்துகின்றோம். யுத்தத்தை வெறுமனே நிறுத்த முடியாது என்பது இன்றைய நிலையாகும். அதாவது யுத்தம் நிறுத்தப்படுவதற்கு நியாயமானதும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யக் கூடியதுமான, அரசியல் தீர்வு ஒன்று காணப்படல் வேண்டும். அத்தகைய அரசியல் தீர்வுத் திட்டம் புலிகள் இயக்கத்துடன் பேச்சு வார்த்தைக்காக முன்வைக்கப்பட்டு உரிய இணக்கத்தை அடைய வேண்டும். இன்றைய அரசியல் தீர்வுத் திட்டம் முழுமையான ஒன்றல்ல. அதில் கூறப்பட்டுள்ள விடயங்கள் சில தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு விரோதமானதாகும். வடக்கு கிழக்கு துண்டாடப்படுவதும் கிழக்கு மேலும் பலதுண்டுகளாக்கப்படுவதும் தீர்வுக்குரிய அம்சங்கள் அல்ல. அவை மேலும் தீர்வைப் பின் தள்ளக் கூடியவைகளாகும். தமிழ்க் கட்சிகளை வெறுமனே சலுகைகளால் திருப்திப்படுத்திக் கொண்டு அரைகுறையான தீர்வுத்திட்டத்தை தமிழ் மக்கள் மீது திணிப்பதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. தமிழ் மக்கள் இதுவரை சிந்திய இரத்தத்திற்கும் விலை கொடுத்த உயிர்களுக்கும் இழந்த உடமைகளுக்கும் நியாயமான முழுமை வாய்ந்த அரசியல் தீர்வே உரிய இழப்பீடாக அமைய வேண்டும் எனக் கருதுகிறார்கள். இதனை நேர்மையான சிங்கள அரசியல் சக்திகளும் இடதுசாரி முற்போக்கு சிங்கள மக்களும் இதனை ஏற்றுக் கொள்கிறார்.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியும் பேரினவாத சக்திகளும் தத்தமது அரசியல் இலாபம் கருதியே செயல்படுகிறார்கள். ஐக்கிய தேசியக் கட்சி செய்த கொடூரங்களின் விளைவுகளை இன்று மறைக்கப் பல வேடங்களில் பேசி வருகின்றது. இதையிட்டு தமிழ் சிங்கள முஸ்லிம் மக்கள் மிக விழிப்பாகவே இருந்து வருகிறார்கள். அரசாங்கம் உகந்த முறையில் தீர்வுத் திட்டத்தை முன்வைத்து விடுதலைப் புலிகளுடன் உரிய வகையில் பேச்சுவார்த்தை நடாத்தி ஒரு நியாயமான தீர்வுக்கு வரத் தவறுமாயின் யுத்தம் மேன் மேலும் நீடித்துச் செல்லும் அபாயமே உள்ளது. இன்றைய அரசாங்கம் அமெரிக்காவின் அரவணைப்புடன் மேலும் யுத்த மார்க்கத்தில் சென்று நாட்டை நாசப்படுத்தப் போகிறதா? அல்லது யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வை விரைவுபடுத்தி செயல்படுத்தப் போகிறதா? என்பதைத் தீர்மானிக்கும் காலகட்டம் இன்று வந்துள்ளது. இதில் சிங்கள மக்கள் மிகத் தெளிவான ஒரு நிலைப்பாட்டினை எடுக்க வேண்டிய நிலையிலும் உள்ளனர் என்பதும் முக்கியமானதாகும். இடதுசாரிகளையும் எமது புதிய - ஜனநாயகக் கட்சியையும் பொறுத்து அநீதிக்கும் அடக்கு முறைக்கும் உரிமைகள் மறுப்பிற்கும் உள்ளான மக்களின் பக்கத்திலேயே என்றும் இருந்து முடிந்தளவுக்குப் போராடி வருவோம்.

கடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் இருண்ட பதினேழு வருட கால ஆட்சியை அகற்றி அதற்குப் பதிலாகவே மக்கள் இன்றைய ஆட்சியைக் கொண்டு வந்தனர். இடதுசாரி முற்போக்கு ஜனநாயக சக்திகளும் சிறு அளவிலாவது ஒரு மாற்று ஜனநாயக அரசாங்கம் ஏற்பட வேண்டும் என்னும் அடிப்படையிலேயே ஆதரவு கொடுத்தோம். ஆனால் இன்றைய நிலை மிகமிக மோசமடைந்தே வருகிறது. இதனை சாக்குப் போக்குக் கூறி அரசாங்கத்தின் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு சப்பை கட்டவோ தவறுகளை மழுப்பிக் கொள்ளவோ நாம் தயாராக இல்லை. ஒடுக்குமுறைகளும் ஜனநாயக மறுப்புகள் எங்கிருந்து வந்தாலும் அவற்றை எதிர்த்துப் போராடுவோம். எமது இந்த நியாயமான நிலைப்பாட்டை சிங்கள, தமிழ், முஸ்லிம் மலையக மக்கள் ஏற்று வருகிறார்கள். அதன் எதிரொலியே பெருந்தொகையான மக்கள் திரண்டிருக்கும் கூட்டமாகும்.''

கடந்த 4.12.97 அன்று கிரான்பாஸ் பலாமரச் சந்தியில் ஐக்கிய இடதுசாரி கூட்டமைப்பு ஏற்பாடு செய்த பகிரங்க பொதுக்கூட்டத்தில் புதிய - ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் ஆற்றிய உரையின் சுருக்கமே மேலே தரப்பட்டதாகும். ஐக்கிய இடதுசாரி கூட்டமைப்பின் சார்பில் வீனஸ் ஜெயத்திலகா, இ.தம்பையா ஆகியோர் தலைமையில் இடம் பெற்ற மேற்படி கூட்டத்தில் பெருந்தொகையான மக்கள் திரண்டிருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

# பச்சைப் பேரினவாதிகளின் பலபக்க முகங்கள்

முடி இழந்த முன்னாள் ஆட்சியாளர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினர். பேரினவாதத்தை யுத்தத் தீயாக மூட்டி அதனை எரிய வைத்தவர்களும் அவர்கள் தான். ஜே.ஆர்., பிரேமதாசா வரிசையில் இறுதியாகச் சிறிது காலம் ஜனாதிபதியாக இருந்த விஜயதுங்கா சிங்களத் தேசிய இனத்தைச் சுற்றிப் படர வேண்டிய செடி கொடிகளே ஏனைய தேசிய இனங்கள் எனக் கூறி தமது உச்சப் பேரினவாதத்தை கக்கிக் கொண்டார். அதனை எந்தவொரு ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய தலைவர்களும் இதுவரை மறுத்துரைக்கவில்லை. வர்க்க பாசத்திற்காகவும் தேவைக்காகவும் அக்கட்சிக்குள் இருந்த தமிழ் முஸ்லிம் பிரதிநிதிகளும் கூட வாய் திறக்கவில்லை.

இத்தகைய பச்சைப் பேரினவாதத்தை உள் உறையாகக் கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சி இன்று எதிர்கட்சி நிலையில் இருந்து கொண்டு மீண்டும் பதவிக்கு வருவதற்காக பல்வேறு முகங்களைக் காட்டி நிற்கிறது. இதனை அண்மைக் காலங்களில் அவதானிக்க முடிகிறது. இவ்வாறு பல முகங்களில் பேசுவதற்கு இன்றைய ஐக்கிய தேசியக் கட்சித் தலைமை தாராள அனுமதியை வழங்கியுள்ளது. எப்படிப் பேசியாகிலும் அடுத்த ஆட்சியாளர்களாகி விடுவதே அதன் குறிக்கோளாகும். முன்னாள் அமைச்சர் லொக்கு பண்டாரா, சுசில் முனசிங்கா போன்றவர்கள் பகிரங்கமாகவே பேரினவாதத்தைக் கத்தி மகாசங்கத்தினரையும் சிங்கள ஆணைக்குழுவினரையும் ஆதரித்து வருகின்றனர். ரொனி டி மெல், சமரசிங்கா, ஏசிஎஸ். ஹெமீட் போன்றவர்கள் அரசியல் தீர்வை ஒருவகையில் தானும் கண்டுவிட வேண்டும் என்ற வகையில் குரல் வைத்து வருகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உள்ள தமிழர்கள் தலைமைப் பீடத்துடன் பேச்சுவார்த்தைப் பயணம் மேற்கொண்டு கறுத்த முகங்களுடன் திரும்பி வந்து ஒன்றும் சரிவராது ஏதோ நம்ம நம்ம வருவாய்த் தோட்டங்களைப் பார்த்துக் கொள்வதுடன் எதிர்கால வாய்ப்புக்காக பின்னால் இழுபட்டுச் செல்லும் முடிவுடன் இருந்து கொண்டிருக்கின்றனர். மலையகத்தில் புத்திரசிகாமணியும் வேலாயுதமும் தத்தமது செல்வாக்கை வேறு வேறு வகையில் நிலைநிறுத்திக் கொண்டு உள்ளூர ஐக்கிய தேசியக் கட்சியைப் பலப்படுத்தும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். புத்திரசிகாமணி தனக்கு கிடைத்த மாகாணக் கல்வி அமைச்சர் (தமிழ்) பதவியைக் கொண்டு பாடசாலை சிறு விழாக்கள் தொட்டு மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு வரை நடாத்திக் கொண்டிருக்கிறார். ஏதோ ஒரு வகையில் மலையக வாக்கு வங்கியுடன் ஒட்டிக் கொண்டிருப்பதற்கு இவை எல்லாம் தேவையானவையாகும் என்பதை உணர்ந்து செயல்படுகிறார். இவை நிற்க, ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா இதுவரை பல கோணங்களில் முகம் வைத்துப் பேசி வருகிறார். எது எது மக்களிடம் எடுபடுமோ அதேவேளை எவற்றை முன்வைத்தால் அரசாங்கத்தின் முயற்சிகளை முறியடிக்கலாமோ அவற்றை எல்லாம் பேச அவர் தயங்கவில்லை. இந்த அரசாங்கம் யுத்தத்தைச் சரியாக நடாத்த வில்லை என்றார். அரசியல் தீர்வுப் பொதியை மகாசங்கத்தினர் எதிர்க்கின்றனர் அரசின் நிலை என்ன என்று கேட்டார். அரசியல் தீர்வுப் பொதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வேளை ஐக்கிய தேசியக் கட்சியின் ஒருபகுதியினர் மிக மோசமான இனவாதத்தைக் கிளறியது பற்றி இன்றுவரை ரணில் மூச்சும் காட்டவில்லை. இந்தியாவால் திரும்பிய பின் 13 வது திருத்தச்

தொடர்ச்சி பக்கம் 2இல்